
# தமிழன் உலா

.. அரங்கசாமி ..




திருக்குறள் பதிப்பகம்
இராசிபுரம்

திருக்குறள் பதிப்பக வெளியீடு 6

# தமிழன் உலா.

(தமிழ் இலக்கியம்)

683.
கலைக்காட்சிக் குழு
சென்னை

★

இஃது

திருக்குறள் ஆட்சி, திராவிட ஆட்சி ஆசிரியர்

**இராசை. கி. அரங்கசாமி அவர்களால்**

இயற்றப்பெற்றது.

⁂

வெளியிடுவோர்:

**திருக்குறள் பதிப்பகம்,**

இராசிபுரம். (சேலம் மாவட்டம்.)

(காபிரைட் பதிவு பெற்றது.)

விலை ரூ. ★ 1—0—0.

1959.

894.8111
அரங்

# சென்னை அரசாங்கக் கல்வி இலாகா டைரக்டர் உத்திரவு.

(R. C. No. 270 J. 3-57 — 12—8—1957.)

திரு. R. K. அரங்கசாமி அவர்களால் எழுதப்பெற்று இராசிபுரம் திருக்குறள் பதிப்பகத்தாரால் வெளியிடப்பெற்ற **தமிழின் உயிர் நாடி** அல்லது **படிப்ப தெப்படி.** என்ற நூலை எல்லா பொது நூல் நிலையங்களிலும் பள்ளி நூல் நிலையங்களிலும் வைக்க அனைவர் கவனத்திற்கும் கொண்டு வருகிறோம்.

**N. D. சுந்தரவடிவேலு,** M. A., L. T.,
சென்னை அரசாங்கக் கல்வி இலாகா டைரக்டர்,
**சென்னை.**

டை படிப்பதெப்படி என்ற நூலை சென்னை அரசாங்க புத்தக ரிஜிஸ்ட்டர் புத்தகத்தில் 1—3—1947. சீரியல் நெ. 338 சப்ளிமெண்ட் நெ. 34. D. பார்ட் 1. B. முறையில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டு. அரசாங்க கெஜட்டில் 26—8—1947-ல் வெளியாகி உள்ளது.

ஒவ்வொரு நூல் நிலையத்தாரும் எங்களிடம் புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

**விலை. ரூ. 1—4—0.**

**அட்டை பைண்டு விலை. ரூ. 2—0—0.**

# மதிப்புரைகள்.

**திரு. டாக்டர். அ. சிதம்பரநாதச் செட்டியார், எம். ஏ. அவர்கள்,**

*பி. எச். டி. — எம். எல், சி.*

**தலைமை ஆசிரியர், ஆங்கிலத் தமிழ் அகராதித்துறை,**

**சென்னைப் பல்கலைக் கழகம் — சென்னை.**

இராசை. திரு. கி. அரங்கசாமி அவர்கள் எழுதிய "**தமிழன் உலா**" என்ற நூலினைப்படித்து மகிழ்ந்தவர்களுள் நானும் ஒருவன். பழைய மரபுகளைப் பெரிதும் பேணியும், புதிய மரபுகளைப் படைத்துக் கொண்டும் இந்நூலாசிரியர் உலாவினை இயற்றியுள்ளார்.

பண்டைய தமிழர்களின் பெருமையை எடுத்து விளக்குவதற்கும், வருங்காலத் தமிழகத்தில் தமிழர் சீரும் சிறப்பும் உற்று வாழ வேண்டும் என்பதை அறிவுறுத்துவதற்கும் உரிய வகையில் எழுதப்பட்டுள்ள இந்நூலினைப் போற்றுகின்றேன்.

சென்னை<br>
14—12—'59

அன்புள்ள,

**அ. சிதம்பரநாதன்.**

**திரு. கா. அப்பாத்துரை,** *எம். ஏ.,* **அவர்கள்,**

*பன்மொழிப் புலவர், தமிழ் ஆங்கில ஆய்வாளர்,*

**சென்னைப் பல்கலைக் கழகம்—சென்னை.**

பெரியார் R. K. அரங்கசாமி அவர்கள் திராவிட நாட்டுத் திட்டங்களை இலக்கிய வடிவில் கொண்டுவந்து ஏற்கனவே பாராட்டுப் பெற்றவர். நேரடியான இலக்கியத் துறையிலும் திராவிட உணர்ச்சிப் பின்னணியுடன் அமைந்த உலா, தூது, பரணி, கலம்பகம், திருப்புகழ் அருட்பா மரபில் உள்ள பாடல்கள் பலவற்றை நான் வாசித்து மகிழ்ந்தேன்.

இவை பரவுவது இலக்கிய உருவிலும் திராவிடக் கருத்து பரவப் பெரிதும் உதவும் என்று உறுதியாக நம்புகிறேன். அப் பாடல்களை வெளியிடவும் பரப்பவும் அன்பர்கள் அனுதாபிகள் உதவுவது பெரிதும் விரும்பத்தக்கது. இவர் வளர்ச்சி இலக்கியத்தில் இயக்க வளர்ச்சியாயமையும் திட்ப நயம் உடையது.

**கா. அப்பாத்துரை.**

சென்னை.

**திரு. க. வெள்ளைவாரணனர் அவர்கள்,**
*தமிழ்ப் பேராசிரியர்,*
**அண்ணாமலைப்பல்கலைக் கழகம்—சிதம்பரம்.**

இராசை. திருவாளர் கி. அரங்கசாமி அவர்கள் தெய்வப் புலவர் அருளிய திருக்குறளில் பெரிதும் ஈடுபாடுடையவர். தமிழ் மொழி வளர்ச்சியிலும் தமிழர் முன்னேற்றத்திலும் பேரார்வம் உடையவர். இவரால் இயற்றப்பெற்ற "**தமிழன் உலா**" என்ற பனுவலைப் பார்த்தேன். இந்நூலில் நடையாலும் பொருளமைதி யாலும் பழமையையும் புதுமையையும் ஒரு சேரப்பெற்று விளங்குதல் கண்டு மகிழ்ந்தேன்.

இதனைச் சுவைபெறப் பாடிய நண்பரது கவி வன்மையும் தமிழார்வமும் பாராட்டத் தக்கனவாகும்.

*அண்ணாமலை நகர்.*
*12—12—'59*

**இங்ஙனம்,**
**க. வெள்ளைவாரணன்.**

**திராவிட ஞாயிறு ஞா. தேவநேயப்பாவாணர்**, எம்,ஏ., **அவர்கள்**
*தமிழாராய்ச்சித்துறை வாசகர்,*
**அண்ணாமலைப் பல்கலைக் கழகம்—சிதம்பரம்.**

திருக்குறள் ஆட்சி — திராவிட ஆட்சி ஆசிரியர்: இராசை கி. அரங்கசாமியார் இயற்றிய "**தமிழன் உலா**"வைப் பார்வை யிட்டேன். அதிலுள்ள கருத்துக்கள் அழகாகவும் பொருத்த மாகவும் உள்ளன.

எழுத்துப்பிழைகளைத் திருத்தி அச்சிடின் சிறப்பாகவிருக்கும்.

*அண்ணாமலை நகர்.*
*12—12—'59*

**ஞா. தேவநேயன்.**

**திரு. டாக்டர். மு. வரதராசன் அவர்கள்,**

*தமிழ்ப்பேராசிரியர்,*

**பச்சையப்பன் கல்லூரி—சென்னை.**

தமிழன் உலா என்னும் இந்நூல் பழைய தமிழ் மரபுடன் புதிய கற்பனை வளமும் சேர்ந்து அமைந்துள்ளது. ஏழு பருவ மாதரை வருணிப்பதில் முற்காலப் புலவர்கள் அவர்களின் உடல் வனப்பையும் வளர்ச்சியையும் மிகுதியாக எடுத்துரைத்தனர். அவை வேண்டாதன. அவற்றை இந்நூலாசிரியர் விட்டமையால் நூலின் சுவை குறைய வில்லை. நூல் நாகரிகச் சிறப்புடையதாய் விளங்கு கிறது. அந்த மாதர் விலைமகளிராய்த் தலைமகனிடம் காதல் கொண்டு அழியும் காட்சி இங்கு இல்லை. வீரமகளிராய்த் தமிழ்ப் பண்புகள் விளங்க நாட்டின் பெருமையைக்காக்க முற்படுதலையே இந்நூலில் காண்கிறோம்.

இடையிடையே சாதிக்கொடுமை முதலியவற்றைச் சாடி யிருப்பதும் போற்றத்தக்கதாகும்.

நூலின் கருத்தும் கற்பனையும் போலவே நடையும் அமைப்பும் சிறந்துள்ளன. ஆசிரியரின் முயற்சி வெல்க.

**மு. வரதராசன்.**
*29—11—'59.*

**திரு. கலைஞர் மு. கருணாநிதி M. L. A. அவர்கள்**

*ஆசிரியர்,* **முரசொலி,**

**சென்னை.**

இராசிபுரம் கி. அரங்கசாமிப் புலவர் இயற்றிய **'தமிழன் உலா'** என்ற நூலைப்படித்தேன். பண்டைய இலக்கியத்திலுள்ள உலா என்னும் வகையைப் பின்பற்றி இக்காலக் கருத்துக்களும் திருக்குறளின் விழுமிய அறவுரைகளும் இடையிடையே விரவிவரத் தமிழருக்குப் பெருமை தரும் முறையில் இயற்றியுள்ளார்.

அனைவரும் கற்றுப் பயனடையத் தக்கதாக நூல் இலங்கு கிறது.

**மு. கருணாநிதி.**
*8—12—'59.*

**திரு. க. அன்பழகன், M. A., M. L. A. அவர்கள்,**
**பேராசிரியர், சென்னை.**

"**தமிழன் உலா**" வினைக் கண்ணுற்றேன். இற்றைநாள் தமிழர்கள் உற்ற தாழ்வினைப்போக்கும் தலைவன் நடாத்தும் வெற்றி உலாவாக விளங்குவது கண்டு இன்புற்றேன்.

இன்பம் வேண்டாதார் இவ்வுலகில் இல்லை. அது குறித்தே உலா நிகழ்ந்தது முன்னாள். அதுவும் நல்லின்ப நயத்தைக் காட்டுவ தாக அமையவில்லை. மகளிர் மாட்சியையும் பெண்ணின் பெருமை யையும் மறந்த இன்ப உலாக்கள் அவை.

இன்றோ பெண்ணின் பெருமையில், பண்பாட்டின் உயர்வினில், தொண்டின் மேன்மையில் இன்பம் பொங்கும் உலா நிகழ வழி காண்கிறார் ஆசிரியர்.


'இன்பத்தமிழ்' அமிழ்தினும் ஆற்றல் மிகு தமிழ், நற்றமிழ், என்று நல்லோர் வழங்கிய தமிழேதான் இன்பம். யான் பெற்ற தமிழை (தமிழ் உணர்வை) பெறுக இவ்வையகம் என்ற உணர்வுடன் வரும் உலாவே உலகோர்க்கு இன்பம் வழங்குவதுமாம்.

வாழ வழி வகுக்கும் வான்கதிரோன் கீழ்த்திசையில் எழுவதில் விளையும் நலனை எடுத்துக்காட்டி, தமிழா! விழி, எழு; செயல் செயப் புறப்படு, என அறிவுறுத்தி ஆணுக்குப் பெண் தாழ்வில்லை என்னும் கருத்தோங்க, பேதையும், பெதும்பையும், மங்கையும், மடந்தையும், அரிவையும், தெரிவையும், பேரிளம் பெண்ணும், மாட்சியுடன் காட்சி நல்க சிறுரும் பெரியோரும் கடமை உணர்வுடன் செயல்பட "**தமிழன் உலா**" நிகழ்வது தமிழர்க்குப் பெருமை யாகும். தமிழர் நாகரிகம் இதனால் விளக்கமுறுகிறது. வள்ளுவர் வகுத்த நெறி இதனால் ஒளிர்கின்றது. பகுத்தறிவு மணம் பரவுகின்றது. விடுதலை ஆர்வம், உரிமை எண்ணம் ஓங்குகிறது வருங்காலத்தை உருவாக்கும் இறவாத புகழுடைய புது நூலாக இது உலா வருகின்றது.

இந்நூலாசிரியர் உயர்திரு கி. அரங்கசாமி அவர்களின் உணர்வும் ஊக்கமும் முயற்சியும் தொண்டும் பெரிதும் பாராட் டத்தக்கதாகும். வெல்க தமிழன் உலா! வாழ்க ஆசிரியர் தமிழ் அரங்கனார்!

**க. அன்பழகன்**

*5—12—'59.*



இந்நூலாசிரியர்:

**இராசை கி. அரங்கசாமி**

# முன்னுரை.

தமிழ்ச் சங்க தொடக்க காலம், இற்றைக்கு சற்றேறக்குறைய பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் எனலாம். அக்காலத்திலேயே தமிழ்ப் புலவர்களும் இருந்தனர். தமிழிலக்கியங்களும் இருந்தன வென்றால் தமிழின் தொன்மைச் சிறப்பு எத்துணைத்து என்பதை அனைவரும் அறியலாம். அச்சங்க காலத்திற்கு முந்திய நூற்களுள் பலவற்றைக் கடல் கொண்டது. பல நூற்கள் எரியாலழிவுற்றன. பல நீரால் அழிவுற்றன. பல செல்லரிப்புண்டு சிதைந்தன. அத்தகு இடருட் சிக்கி சிதையாதிருந்தன ஒரு சிலவே.

இடைக்காலத்தே மூவேந்தராட்சியில் சமயத்தை வளர்க்கத் தோன்றிய நூற்களும் பலப்பல. அவைகள் கடவுளிடம் குறைகளைக் கூறி துதித்துப்பாடி இம்மையை வெறுத்து மறுமையில் பேரின்பத்தைத் தேடும் வழிகளை வளர்த்தன. பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை என்ற வள்ளுவர் வாக்கை மறந்து, பொருள் நிலையற்றது என்ற போக்கைப் பற்றினர். உலகம் இன்று பொருள் வடிவாக உள்ளது. இந்நிலையில் தமிழன் நட்பை மறந்தான்—நன்றியை மறந்தான் நாட்டு உணர்ச்சியையும் மறந்தான். வீரம் சீரழிந்தது, வெற்றி கலைந்தது, துன்பந்தலைதூக்கியது. பல்குழுவால் நாடு சிதறுண்டது. உறுபசியும், ஓவாப் பிணியும், செறு பகையும், சேர்ந்து வளர்ந்தன. கேள்விச் செல்வமும் நாவின் செல்வமும் பூவின் செல்வமும் பிற நாட்டினர் கைக்குட்பட்டன.

இந்நிலை மாறி நன்னிலையாம் முன்னிலை வளர, நம் தமிழில் நம் நாட்டு வாழ்க்கையின் சிறப்புணர்த்தும் வீர இலக்கியங்கள் மலிய வேண்டும். நம் உள்ளத்துள் ஒன்றிய, ஒன்றுபட்ட இறையை அகத்தே வணங்க வேண்டும். புறத்தே இல்வாழ்க்கையின் இயல்பறிந்து இன்புற்று வாழ முயல வேண்டும். “**குடிசெய்து வாழ்வானைத் தேடி இறைவன் முன்னின்று காப்பான்**” என்ற திடங்கொண்ட

உள்ளத்தோடு திகழ வேண்டும். இக்கருத்துக்களை இலக்கியம் ஒன்றுல் தான் நிலைக்கச் செய்ய முடியும். இக்கருத்துப் பன்னுட்கு முன்னிருந்தே என் உள்ளத்தைத் தூண்டி வந்தமையால் திருக்குறள் வெளியீட்டிற்குப்பின் திராவிட ஆட்சி முறை 333 என்ற வெண்பா நூலை இயற்றி வெளியிட்டேன். நாடும், நன் மதிப்பையும் ஆதரவையும் தந்தது–தருகின்றது. இன்று, "**தமிழன் உலா**" வைப் படிக்கிறீர்கள். விரைவில் "**அன்புக் கலம்பகம்**" "**புலவர் விடு தூது**" "**திராவிடத்துப் பரணி**" "**அறநெறித் திருப்புகழ்**" "**வாழ்வியல் அருட்பா**" என்ற நூற்களையும் படிப்பீர்கள்! இந்நூற்கள் எழுதி முடிக்கப்பெற்றுப் புலவர்களால் ஆய்ந்தறியப்பெற்று அச்சேறத் தயாரிலுள்ளன. நாட்டுணர்ச்சிமிக்கோர் ஒவ்வொரு புத்தகத்திற்கும் ஒரு ரூபாய் வீதம் முன் பணம் அனுப்பினுல் வெகு விரைவில் புத்தகங்கள் உங்களைத் தேடியடையும். தமிழன் உலாவிற்கு முன் பணம் தந்த அன்பர்கட்கும் நூலை ஆய்ந்து அரங்கேற்றித்தந்த புலவர்கட்கும் எனது மனமுவந்த நன்றி. வணக்கம்.

**இராசை. கி. அரங்கசாமி.**

## பிழை திருத்தம்.

| | | | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 14 | பக்கம் | 3-வது வரி | ஊரிடுமே | —ஊறிடுமே |
| 17 | " | 1 " | நண்காலே | —நன்காலே |
| " | " | 20-வது கண்ணி | தொ5லேதனே | —தொல்லேதனே |
| 31 | " | 161 " | திண்மைகொலும் | —திண்மைகொளும் |
| 35 | " | தலைப்பு | சீருர் | —சிருர் |
| 43 | " | 288-வது கண்ணி | நல்வாழ்வ | —நல்வாழ்வு |
| 46 | " | 322 " | சிதருண்டு | —சிதறுண்டு |
| 56 | " | 423 " | துணிவளத்தா | —துணிவுளத்தா |
| 59 | " | 456 " | இல்வாழ்வ | —இல்வாழ்வு |
| 60 | " | 467 " | பைநதமிழ் | —பைந்தமிழ் |
| 64 | " | 503 " | இ ளில்லாப் | —இருளில்லாப் |
| 68 | " | 551 " | தாவியடைந்த | —தாவியடைந் |

# அரங்கேற்று விழா.

*இராசிபுரம் மும்மொழிப்புலவர்*

**திரு. ஆ. இராமசாமி அய்யா அவர்கள் தலைமையில்**

8—3—1959 *மாலை* 7-*மணிக்கு*

*இராசிபுரம் சேணியர் பொதுக்கட்டிடத்தில்*

**வித்துவான் திரு. ஆ. பொன்னுசாமிப் பிள்ளை**
**" திரு. கி. சாமிக்கண்ணு முதலியார்**
**" திரு. மு. இராமசாமி ரெட்டியார்**
**" திரு. ப. ந. பெரியதம்பி உடையார்**
**" திரு. கு. சிவசங்கரன்**

*ஆகிய புலவர்கள் முன்னிலையில்*

**"தமிழன் உலா"** *நூலாசிரியர்* **திரு. கி. அரங்கசாமி** *அவர்களால் படிக்கப்பெற்று, விளக்கம் கூறப்பெற்று, அரங்கேற்றப்பெற்றது.*

## புலவர்கள் பாராட்டுரையின் சுருக்கம்.

**"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றுமை நன்று"** *என்ற வள்ளுவப் பெருந்தகையாரின் மறைமொழிக்கு ஒப்ப வசையற்று இசை பெற்று வாழ்ந்தவர்களே மண்ணில் வாழ்ந்தவர்களாவர், புகழற்றோர் பிறவாதவரே யாவர். அத்தகைய பிறவிப்பயனைப்பெற விழைந்த நம் முன்னோர்கள்* **"என்றும் உள தென்தமிழை இயம்பி இசை—புகழ் கொண்டனர்."** *தெள்ளூற்ற தமிழமுதின் சுவை கண்டவரே இங்கு நிலைத்து நிற்பவராகின்றனர்.*

தமிழமுதத்தை, சுவையை உள்ளூறத் துய்த்த சான்றோர்கள் —தமிழ்ப் புலவர்கள், தாம் கண்ட சுவையை யாவரும்—எல்லாக் காலத்தாரும் பெற்று இன்புற வேண்டும் என்ற நன்னோக்கத்தோடு தங்களது அனுபவ உண்மைகளை இலக்கியங்களாக அருளிச் சென்றனர். அப்பெருந்தகையாளர்கள் **"யாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"** என்ற உயரிய கொள்கைக்குரியாரன்றோ! ஆகவே தமக்குக் கிடைத்த தமிழ்ச்சுவையை—தமிழ்ச்செல்வத்தை அவர்களால் வாரி வழங்காமல் இருக்க இயலாது. இவ்வாறாக ஒவ்வொரு காலத்திலும் இன்பங் கண்ட எல்லாப் புலவரும் தமிழிலக்கியச் செல்வத்தைப் பெருக்கி வைத்துள்ளார்கள். ஆகவே நமக்குக் கிடைத்த தமிழ்க் கருவூலத்தை —தமிழிலக்கியங்களை நாம் படித்துப் படித்து இன்புறுதலோடு புதுப்புது இலக்கியங்களையும் சேர்த்து தமிழ்ச் செல்வத்தைப் பெருக்கிக்கொண்டே போதல் வேண்டும். அங்ஙனம் தமிழ் இலக்கியச் செல்வத்துள், இலக்கிய வரிசையுள் தானும் ஒன்றாகச் சேர்ந்து பெருமை பெற வந்துள்ளது **தமிழன் உலா.**

தெருத்தோறும் முழக்கம் செய்து வரும் தேமதுரத் தமிழ் ஓசையை உலகமெலாம் பரவும் வகை செய்ய விழையும் தமிழ்த் தொண்டர்களுக்கு, அன்னார் செய்ய வேண்டியனவற்றை நம் செந்தமிழ்க்கவி பாரதியார் வகைப்படுத்திக் கொடுத்துள்ளார். **"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும், என்பதும், இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்"** என்பதும் பாரதியாரது தமிழ் வளர்ச்சித் திட்டங்களாகும். புது நூல்கள் இயற்றுதலாகிய தமிழ்த் தொண்டினைச் செய்ய இந்நூலாசிரியர் பேரார்வத்தோடு முன்வந்துள்ளார். **"இருந்தமிழே உன்னால் இருந்தேன் விண்ணோர் விருந்து அமிழ்து எனினும் வேண்டேன்"** என்று வாழ்ந்து வரும் இந்நூலாசிரியரது தமிழார்வத்தால் இதுவரை வெளிவந்த புது நூல்கள் சில, வெளிவர இருப்பன பலவாகும். தமிழ்த்தாயின் தண்ணருளால்

இவரது தமிழ்த்தொண்டு மேன்மேலும் வளர்ந்து புகழ் பெற்று சிறப்புற வேண்டும் என விழைகின்றோம்.

செல்வம், அருட்செல்வம், பொருட்செல்வம், மக்கட்செல்வம், கலைச்செல்வம்,கல்விச்செல்வம், சொற்செல்வம் எனப் பலபட விரிந்து கிடப்பது போன்று தமிழிலக்கியமும் சங்க இலக்கியம் சமய இலக்கியம், பேரிலக்கியம் சிற்றிலக்கியம் எனப் பலவாறாக உள்ளது. சிற்றிலக்கியம் 96 வகைப் பிரபந்தங்களாகப் பரந்துபட்டிருக்கிறது. அவைகளுள் உலா என்பதும் ஒன்று. தமிழ் மொழியிற் பல உலாக்கள் உள்ளன. அவைகளோடு சேர்ந்து உலாவ இக்காலத்துத் **தமிழன் உலா** வந்துள்ளது.

நூலாசிரியரது தமிழ் உள்ளத்தின் கற்பனையில் தோன்றிய தமிழன்—தமிழ் நாட்டின் பண்பெல்லாம் ஒருங்கு அமையப்பெற்ற தலைவன், இந்நூலில் உலா வருகிறான். பாரத நாட்டுப் பண்பை யெல்லாம் ஒன்று சேர்த்து பாரதத் தாயாகப் பாரதியார் அமைத்திருப்பது போன்று, இங்கும் தமிழ்ப் பண்பெல்லாம் ஒன்று திரட்டித் தமிழனாக உருவகிக்கப்பட்டுள்ளது. பழமையை ஒட்டியமைந்த இந் நூலில் படிப்போர்க்கு இன்பம் ஊட்டுவனவாய் அமைந்த நயங்கள் பலப்பல உண்டு.

உலா வரும் தமிழனின் தலைவனைக் கண்டு உளங்கனிந்து எதிர் கொண்டு நிற்கும் ஏழு பருவப் பெண்களைக் கூறும் கலி வெண்பாக்கள் மிக சிறப்பாக அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக சில காண்போம்.

பேதைப்பருவம்:—"**புத்துளத்துப் பொற்கதவின் பூட்டு—மறுவில்லா**
**கைத்தலத்துத் திங்கள்**"

பெதும்பை:— "**செல்விருந்து ஓம்பிச் செழும் பருவம் தேடுகின்ற**
**நல்விருந்தாம் நுண்பெதும்பை**"

மங்கை:— "**கண்ணழகி என்றதுவே கண்ணகியென்றானதென**
**உண்ணுழைந்து கற்றோர்கள் யூகிக்கும்**"
**[அழகுள்ள மங்கை]**

மடந்தை:— "தீநோக்க வன்கணரின் தீவழிக்குத் தானமையா
மானேக்கம் உள்ள மடந்தையிவள்"

அரிவை:— "தாயகத் தான்விளங்கத் தாய்மையாய்ச்
[சேய்களுடன்
வாயாடி யின்பளிக்கும் வாய்மையினள்"

தெரிவை:— "கற்றுக்கற்று உள்ளூறும் கற்பனையின் பேரறிவால்
முற்றுப்பெற்று ஓராற்றல் மூண்டிடச்செய்—
சுற்றத்தாள்"

பேரிளம்பெண்:—தொண்டாற்றத் தூயநிலை தூக்குபவள்

அவ்வப்பருவத்தின் உள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்த இப்பகுதிகள் நினைந்து இன்புறத்தக்கனவாயுள்ளன அல்லவா!

எந்த நூலாசிரியரும் அவர்கள் வாழ்ந்த காலத்திற்குக் கட்டுப் படுதல் இயல்பு. இவரும் இக்காலத்தின் முற்போக்குக் கொள்கையை மேற்கொண்டு தலைவன் உலா வரும்போது சிறுவர்களும் வாலிபர் களும் பெரியோர்களும் அவன்பால் பேரன்பு கொண்டனர் எனப் புதுமையாகக் கூறுகின்றார். உலா இலக்கணத்திற்கு இப்பகுதி சிறிது மாறுபட்டிருப்பினும் மிக நயமாக அமைந்துள்ளது. இப்புதுமை பெரும் புலவர்களின் ஆராய்ச்சிக்கு உரிய ஒன்றாகும்.

தமிழில் தோன்றிய எந்த இலக்கியமும் தித்திக்கும் அமிழ்தான திருக்குறளின் கருத்தை இடை இடையே கொண்டுதான் சிறப்படைந் துள்ளது. சுருங்கக் கூறின் திருக்குறளின் நிழல் ஆடாத தமிழ் நூல்களே இல்லை எனலாம். இந்நூலிலும் ஆங்காங்கே திருக்குறளின் கருத்துக்கள் மிளிர்ந்து நூலைச் சிறப்பிக்கின்றன.

முகை மொக்குள் உள்ளது மோப்பம் போல் பேதை
நகை மொக்குள் உள்ளதே நாணம்

தானேக்கும் காலைத் தரைநோக்கி நோக்காக்கால்
தானேக்கி மெல்லநகும் தன்மை

ஏதிலார் போல எழிலுடைய திண்பெதும்பை
காதலது பூக்கின்ற காலமிதே

உடம்பொடு உயிரிடை ஒன்றென்ன நண்ணும்
மடந்தையோ டொன்றிடுமே மாண்பு

இதுபோன்று திருக்குறளின் சொல்லாட்சியைக் கொள்வன சில, திருக்குறளை அப்படியே ஏற்று நிற்பன சில.

**ஆலுக்கும் தமிழுக்கும், ஆற்றுக்கும் தமிழுக்கும்** சிலேடையாகக் கூறப்பட்டுள்ள பகுதி, இந்நூலாசிரியரின் ஆழ்ந்த தமிழ் நூற்புலமைக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

பண்டை இலக்கியத்தில் உள்ள இக்காலத்துக்கு வேண்டிய புதுமைக் கருத்துக்களை நினைவூட்டிச் செல்லும் செய்யுட் பகுதியையும் இங்குக் காணலாம். தமிழ்த்தாய்க்குச் **சிந்தாமணி**யாக விளங்கும் திருத்தக்க தேவரது பண்டைக் காவியத்தில் "**சச்சந்தன தன்மனைவி விசையையை மயில் பொறியில் ஏற்றி வான்வழியாக அனுப்புகிறான்**" என்று பொறி இயக்கம் கூறப்பட்டுள்ளது. அதுபோன்றே நெஞ்சையள்ளும் **சிலப்பதிகாரத்தில்** மதுரை மாநகரின் மதில்களில் தானே இயங்கும் (பகைவர்களைக்கொல்லும்) பொறிகள் பல வைக்கப் பட்டனவாக இளங்கோவடிகள் கூறுகின்றார். அப்பொறி இயக்கத்தை இந்நூலாசிரியரும் நினைவிற்கொண்டு

மேவும் இளவாலிபர்கள் மின்பொறியை ஊக்குவதும்
வேவுசெய லாற்றுவதும்.

எனக் கூறித் தமிழ்ப் பெருமக்களது விஞ்ஞான ஆற்றலை எடுத்துக் காட்டி உள்ளார். புத்தம் புதிய கலைகள் மேற்கில் இருந்துதான் மெத்த வளர்ந்து இங்கு வந்தன என்ற கூற்றைப் பொய்யாக்கித் தமிழனின் விஞ்ஞானப் பெருமையை நிலைநாட்டியுள்ள இப்பகுதி அனைவருடைய பாராட்டுதலையும் பெறும் என்பதில் ஐயம் இன்று.

**விந்தியத்தை, எல்லையெனக்கொண்டு இனிய தமிழ்**
**நற்கலையை, எல்லையிலா தாக்கும் இயல்பினேன்.** என்றும்

**பாமாலை சூடிப் பழகியவன் மற்றவர்போல்**
**பூமாலை ஒன்றில் பொலியாதோன்.** என்றும்

தமிழனின் சிறப்பைக் காட்ட வந்துள்ள இப்பகுதி மேலை நாட்டறிஞரினும் தம்மைத் தாழ்வாக நினைத்து உருகும் இக்காலத் தமிழரின் தலையை நிமிர்த்தி வீறுபெறச் செய்கிறது.

இவ்வாருகப் பல்வகைச் சிறப்புக்களும் அடங்கப்பெற்ற இவ்வுலாப் பனுவல், தமிழர் அனைவர் உள்ளத்திலும் உலாவிவர எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் முன்னிற்க வேண்டும் என விரும்புகிறேம்.

**ஆ. இராமசாமி அய்யா**
(விழாத் தலைவர்)
**அரங்கேற்றுப் புலவர் குழு.**

**இராசிபுரம்,**
**8—3—1959**

## கதைச் சுருக்கம்.

அனைத்துயிர்க்கும் ஆதிமுதலிடமான நம்நாடு வளங்கொழிக்கும் செல்வத் திருநாடு. அந்நாட்டில் பாரியென ஓரியென வள்ளண்மையிற் சிறப்புற்ற வானம் மழையைப் பொழிந்து உயிரினங்களைப் போற்றிப் புரக்கின்றன. மதியும் விண் மீன்களும் இரவுக் காலங்களில் தண்ணொளியைத்தந்து காக்கின்றன. அதிகாலையில் கோழியும் காக்கையும் மக்களைத் துயிலினின்று எழுப்ப திருப்பள்ளியெழுச்சிப் பாடுகின்றன. மகளிர் தம்தம் மனைகளைச் சுத்தம் செய்து கோலமிட்டு அழகு செய்கின்றனர்.

கவிந்த காரிருளைக் கழித்து கதிரவன் எழுகின்றான், தன் வெயிற்படையோடு உயிரினங்கட்குத் தேவையான உணவு வகைகள் உண்டாகவும், இருட் காலத்திலே வெளிப்போந்து தீமைகள் பல செய்யும் பிராணிகள் ஓடி ஒளியவும், பேரறிவு பெருகிடவும், மாசுற்ற மனமுடைய தீயோர் மாய்ந்திடவும், வீண் பக்தி தேய்ந்திடவும், தன் கதிரொளியைப் பரப்புகிறான்—**உதய சூரியன்.** இத்தகு இயற்கைச் சிறப்புடைய தமிழ் நாட்டில், அரியணையிலிருந்து ஆண்டு வந்த தமிழ் மொழியோ; வன்மையும் மென்மையும் ஆய இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட நிலையோடும் ஒலித்து ஒன்றி உயர் புகழ் பரப்பி ஓங்கி வளர்கின்ற ஒன்றாகும். கன்னடம் தெலுங்கு மலையாளம் துளு ஆகிய திராவிட இன மொழிகளும் நம் தாய்த் தமிழ் மொழியே. இம்மொழியின் பெயராகிய "**தமிழ்**" என்பது சிறப்பு மிக்கதொரு திருப்பெயர். தென்னகத்தின் பன்னிரண்டு மொழிகளாய் விளங்குவதும் **தமிழே.**

இங்ஙனம் பல திறத்தாலும் சிறப்பு மிக்க நந்தமிழை தமிழ்க் கலையை வளர்க்கும் பண்புடைய தமிழன், தமிழ்க் கல்வியை மிகப்

பெற்ற தமிழன், தன்மானத்தோடு வாழுகின்ற மாண்புடைய தமிழன், கேள்விச் சுவையில் விருப்புடைய தமிழன், சேரன் செங்குட்டுவன் — பொற்கைப் பாண்டியன் — மனுநீதிச் சோழன்— அதிகமான் — குமணன் — இமய வரம்பன் — கங்கை கொண்ட சோழன் — இராசேந்திரன் — கரிகாலன் போன்ற தமிழ்க் காவலர் களின் மரபிலே தோன்றிய புலமையுடைய தமிழன் **உலா**வை மேற் கொள்கிருன். நாட்டு நிலையறிய, நல்லோரின் கொள்கையறிய. அந்நாள் பொதுவாக தமிழினத்தின், குறிப்பாக உழவர்களின் ஒப்பற்ற விழா நாள்—ஆம்! **தைப் பொங்கல்** திருநாள் தான். அந்நாளில் அத்தமிழன் காலைப் பொழுதினில் வெந்நீரிலே தலை முழுகி அழகிய கைத்தறி ஆடையை அணிகிருன். பின் அறுசுவை உணவை உட்கொள்கிருன். உண்டபின் சற்று இளைப்பாறி உலாவுக்கு ஆயத்தமாகின்ருன்.

இருபெரு வெண் குதிரைகள் பூட்டிய தேரில் உலாப் புறப்பட் டான் தமிழன், பல்லாயிரக் கணக்கான மக்கள் முன்னும் பின் னும் கூடிச் செல்கின்றனர். உலாத் துவக்கத்தில் தாரையும் தப்பட்டையும் உறுமியும் உடுக்கையும் முழங்கின; மேள வகையோடு தாள வகையும் இசைக்கருவி வகைகளும் இன்னிசையை எழுப்பின; வேட்டுகளும் வாண வேடிக்கையும் இடம் பெற்றன. கூட்டத்தின் இடையிடையே பொய்க்கால் குதிரை ஆட்டமும், புலி வேடமும், சிலம்ப விளையாட்டும், வாட்போரும் இன்ன பிற விளையாட்டுக் களும் நிகழ்கின்றன. கண்டு களிப்புற்ற மக்களோ "**தமிழன் வாழ்க! தலைவன் வாழ்க!!**" எனக் கூறுகின்றனர். சிருர்களும் வாலிபர்களும் பெரியோர்களும் உலாவில் பங்கு பெற்று தமிழனைக் கண்டு பாராட்டுகின்றனர். தமிழனும் அவர்களை நோக்கிய அளவி லேயே அவர்களின் உள்ளத்து வேட்கையும் தேவையும், தான் ஆற்ற வேண்டிய பணிகளையும் உணர்கின்ருன்.

இவ்வுலாக் காட்சியைக் காண ஏராளமான ஆடவரும் பெண்டிரும் இருமருங்கிலும் கூடி உள்ளனர். பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் எனப்படும் ஏழு பருவப் பெண்களும் காண்பவர்களுள் உள்ளனர். அவர்கள் முறைபடத் தமிழனைக் கண்டு நாட்டுக்கும் ஏட்டுக்கும், மொழிக்கும் கலைக்கும், கல்விக்கும் செல்வ நிலைக்கும், உரிமை வாழ்வுக்கும், உயர்பண்பாட்டு வளர்ச்சிக்கும், உழைக்கத் தக்கவன் இவனே எனத் தெரிந்து தெளிகின்றனர். அதே போழ்து தமிழனும் அவர்களைக் காணுகின்றான். அவர்களின் பெண்மைப் பெருமையையும், தன்மைச் சிறப்பையும் வறுமை வாழ்வையும் அகத்தே இருத்தி அவர்களுக்கான நலன்களையும் நல்ல திட்டங்களையும் செயல்களையும் விரைவில் சமைத்துக்கொடுக்க உறுதி கொள்கிறான்

இவ்வாறு உலாவினை மேற்கொண்ட தமிழன் தன் உலாக் காலத்துளேயே தான் ஆற்ற வேண்டிய கடமைகளை, செயல்களை மக்களின் உணர்வினின்றும் நிலையினின்றும் தேர்ந்தெடுக்கிறான். அத்தகு செயல்களைச் செய்வேன் என்று உறுதி கூறியதன் வழியாக அனைவரின் ஆதரவையும் வாழ்த்தையும் பெருகிறான். இந்நிலையோடு நேரிய நெஞ்சோடு ஆற்றும் தன் ஆக்கப் பணியால்—கடமையால்—கண்ணியத்தால் ஓரூரிலல்ல, ஈரூர்களிலல்ல நாட்டின் எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும், முக்கிய நகரங்களிலும் இத்தகு உலாவினை மக்களின் மகிழ்ச்சி வரவேற்போடு, வாழ்த்தோடு தமிழன் மேற்கொள்கிறான்.

# தமிழன் உலா.

## இறை வணக்கம்.

### நேரிசை வெண்பா.

ஒன்ருய் உறவாய் உலகோர்கள் ஏத்தெடுப்ப
நின்ருனைப் போற்றி நிலையுடைய — ஒன்ருன
வீரத் தமிழனுலா வேந்தாயிந் நாடாள
தீரத் துடனுரைத்தேன் தேர்ந்து.

உள்ளத்தி னுள்ளே ஒளியாகிக் காணுகின்ற
தெள்ளத் தெளிந்தத் திறலோனை — வள்ளலெண்
வாழ்த்தியே ஒன்ருகி வாழத் தமிழனுலா
தாழ்த்தார்து நின்றளித்தேன் தாங்கு.

இயற்கை யெழிலதனில் இன்பத்தைக் கண்டு
செயற்கை முறையமைத்துச் சேவை — முயற்சியுற
சித்தமுளே முற்பணிந்து செய்வதனைச் செய்திடுதல்
எத்துறைக்கும் நல்வணக்கம் ஈண்டு.

# நூற் பயன்

கூட்டும் தமிழனுலா கூர்ந்துணர்ந்து நோக்கமுடன்
கேட்டிடிலோ செல்வாக்கும் கீர்த்திகளும் — பாட்டியலும்
ஊற்றுப் பெருக்கென்ன ஊரிடுமே வுள்ளத்து
போற்றிப் பொருளோடு புக்கு.

## கட்டளைக் கலித்துறை

கோடா குணமும், குறையா வெழிலும், கொடைநலனும்
தேடா வளமும், திரியா நிலையும், திசைகளெலாம்
சூடா புகழும், சொலுமா மதியும், சுகமனைத்தும்
வாடா நலனும் வருமே தமிழன் வருகையிலே.

## எழுசீரடி யாசிரிய விருத்தம்

உலகிய லறிவை யுளபடி யறிவோர் உரிமையு மறுமையு மடைவாரே
நிலமதி னெழிலை நலமுட னறிவோர் நெடுநிலை வளமையு மறிவாரே
நலமது பெறவே தமிழனின் பவனி நடுநிலை தருமுற வினதான
பலகலை தருமே நனிவளமுறுமே படிமிசை நலமுறு வழியீதே.

## கலி விருத்தம்

தமிழ னுலாவினில் தமிழறி வினையறி;
தமிழ னுலாவினில் தகுபொரு ளினையறி;
தமிழ னுலாவினில் தனியறி வினையறி;
தமிழ னுலாவது தனதென வறிகுவாய்.

# நூல்.

## கலி வெண்பா.

### இயற்கை வளத்தின் சிறப்பு.

அனைத்துயிரும் தோன்றுவதற் காதிமுத லாகி
எனைத்துயிரும் வாழ்க்கையை ஏற்று — வினைத்தூய்மை 1

சினைத்திலகும் பேராற்றல் சீற்றத்தோ டோங்கி
மனைத்தூய்மை கொண்டின்பம் மாரு — வனைத்தினிலும் 2

தேறி வளஞ்சிறந்தத் தெள்ளுதமிழ் நாட்டினிலே
சீறி மழைதான் சினந்திரைந்துப் — பாரியெனும் 3

வள்ளல் குறைதீர வாரி வழங்கியபோல்
துள்ளல் வளியூடே தோய்மஞ்சு — வெள்ளம்சூழ் 4

கொல்லிமலை நாடாண்டக் கொற்றவல் வில்லோரி
நல்லாண்மை மீதூறும் நாகரிகச் — செல்வாக்குப் 5

பெற்றிட்ட சீரென்னப் பெய்மழைதான் வான்சிறக்க
உற்றுற் றெளிபரவ வொண்மேகம் — மற்றிடித்து 6

கொட்டிடும் தூநன்னீர் கொல்லிமலை போன்றபல
நெட்டுடைய சாரலிலே நீளருவி — கட்டமுடைத் 7

தோடிவிரைந் தோடிவளைந் தோடிநிறைந் தோடிபுகுந்
தோடியிடைக் காடுபொழில் தேடிநிறைந் — தோடியணை 8

கூடலிலே ஆங்காங்குக் கூடியொரு நீருலகாம்
கூடலினை யுண்டாக்கிக் கூட்டுறவாம் — தேடரிய 9

மீன்முதலை நண்டுநத்தை நீராமை பாம்பினமும்
தேன்சொரியும் சோலைகளும் தேக்கியங்குக்—கான்வழியே 10

செல்லுகின்ற நீரழகைச் செப்புவதோ ? வந்நீரின்
வல்விளைவைக் கண்டினிது வாழ்த்துவதோ ?—பல்வழியால் 11

நீரின் றமையா துலகென்றத் தொன்மறையை
யாருன்னு தாருண்டு யாங்கணுமே ? — காருண்ட 12

மாலைப் பொழுதுறலும் மாதரிழை யிற்பதித்த
நீல மணிகள் நிழலுமிழ — வாலறிவு 13

வெண்மதியம் தண்ணிலவை வீசிவர வானகத்தின்
கண்பலபோல் மின்கள் கவின்செய்யத்—தண்ணெனவே 14

வீங்கிருள்தா னீங்க விடியும் அதிகாலை
பாங்குடனே தோன்றப் பலகலையைத் — தாங்கெழிலாம் 15

## காலைப்பருவக் கலையணுச் சிறப்பு.

பின்னிரவு நண்ணுமோர் பேரின்பம் தோன்றிடவே
முன்னுறவு கொண்ட முதற்காலை — தன்னுறவு 16

உள்ளத்தே தங்கிடலுக் குற்றதொரு நற்காலை
வெள்ளமென ஆற்றலது வேகமுடன் — உள்ளமுடை 17

எல்லா உயிர்களுக்கும் இன்பூட்டும் நண்காலை
பொல்லாங்கே யில்லாதப் பூங்காலை — வல்லவர்கள் 18

தூங்கா விழிப்பினொடு தூயநிலை கண்டிடுவர்
ஏங்கா வுளத்தவரு மின்படைவர் — பாங்காக 19

## காலைத் தூக்கத்தின் கலக்கம்.

இன்புற் றுறங்கிடுவா ரேக்குற் றொருகூட்டம்
துன்புற் றுலகினிலே தொ5லைதனை — முன்பற்றி 20

ஓயா தொழியா தொருநிலையே தானமையா
தேயா தெளியா திடமறியா — மாயா 21

மனதுடனே வாழ்ந்து மனைமகவோ டின்பக்
கனிவுடனே சூழ்ந்துக் கசிவார் — மனமுடைய 22

## காலைக் கடமைகளின் சிறப்பு.

கோழியொடு காக்கையும் கூக்குரலால் பள்ளியெழும்
வாழியைப் பாடித்தான் வாழ்த்திடலும் — தோழியர்கள் 23

தீங்குறுத்துங் குப்பைகளைத் தீட்டித் தெருபுறத்தும்
பாங்கிருக்கக் கூட்டிப் பசுஞ்சாணம் — தேங்குறவே 24

கோலமிட்டு வீட்டெழிலைக் கூட்டு மியல்புடைய
சீலமெட்டு மின்படையச் சேயர்முதல் — வாலறிஞர் 25

சான்றோர் புலவோரும் சாற்றரிய சங்கத்தின்
ஆன்றோர் மகளிரும் அன்புடைமை — யீன்றோரும் 26

## உதய சூரியன் சிறப்பு.

வாழ வழிவகுக்கும் வான்கதிரோன் கீழ்த்திசையில்
சூழ, வெயிற்படையும் சூர்கொண்டு — மேழிக்கால் 27

தான்வளரத் தோன்றுபொருள் தான்வளரப் பன்னுடும்
தான்மிளிர வெங்கதிரைத் தான்வீசி — மேன்மையது 28

எல்லையறு வையகத்தி லெண்ணிறந்தப் பல்லுயிர்க்கும்
சொல்லரிய ஊணின்பம் தோன்றிடவும் — புல்லறிவாம் 29

தீங்கினங்கள் என்றென்றுந் தீய்ந்து மறைந்திடவும்
பாங்கினத்துப் பேரறிவு பாரதனில் — ஓங்கிடவும் 30

குற்றக் கொடுமனத்துக் கோதுற்றோர் கூட்டறியா
வெற்றுச் செயலதனல் வீணுகிப் — பற்றின்றி 31

மாய்ந்திடவும் பல்குழுவும் மாருன வீண்பக்தி
ஆய்ந்தே நிலைதவறி யன்பிழந்துத் — தேய்ந்திடவும் 32

தேங்குபுகழ் பேரறிஞர் தீரப் புனிதருமே
தூங்காத் துணிவினெடு தொன்முறையில் — வீங்கும் 33

அறிவைப் பெறவொளியை ஆசைபெற வீசி
அறிவைத் திறலாக்கி ஆண்டு — நிறுவியதே 34

## தமிழின் சிறப்பு

ஆட்சி தனைப்பூண்டே ஆண்டுவந்த ஆற்றலுடை
மீட்சிப் பொருளிணைந்து மேவுமொரு — காட்சி 35

இனப்பெருக்கை யுண்டாக்கி யீட்டும் தரத்தின்
கனப்பொருத்த மாந்தமிழைக் காணும் — மனத்தெழுந்த 36

ஈதலுக்கு வாய்த்ததுவா யீயக் குறைவிலதாய்ப்
போதலிலா வூதியமாய்ப் பூத்தொளிரும் — தாதுநிறை 37

உத்தமமாம் தத்துவங்கள் ஊறிநின்று பற்றுடைய
சுத்தத் தொடுநிலவி சூருடைத்தாய் — வித்தையெனும் 38

ஊக்கத்தைப் பெற்றனவாய் ஊடுருவு மாற்றலுள
வீக்கப் பொருள்செறிந்து வீறிட்டுக் — காத்தலுடை 39

சிந்தனையை யூக்குவதாய்ச் சீலமொடு நீளறிவாம்
புந்திதனைக் கொண்டனவாய்ப் போக்கறிந்து — முந்துகிற 40

ஏக்கத் தினைநிரப்பி யீடற்ற மாற்றோடு
தேக்கத் தினுக்கொத்துத் தேறிநின்று — பூக்குமொரு 41

ஐந்தறிவும் திண்மையுட னைம்பூதந் தன்னோடு
தந்திறமை தேக்கியவித் தாரணியோர் — விந்தைபெற 42

ஒன்றா யுறவா யொலிபலவும் தாங்கியதோர்
குன்றா வொளியாய்க் குலவியதே — நன்றொன்றோ 43

ஓயாதெக் காலத்தும் ஊற்றெடுக்கும் கூற்றினதாய்ப்
பேயாத நன்மழையாய்ப் பெய்வித்துத் — தீயதுவாம் 44

ஔவியமே தீர்ந்திடுமோர் ஆற்றலுடைத் தாய்மையாம்
ஔவைக் கலைநூ லழகுசெயும் — செவ்வையுடைச் 45

செந்தமிழாய்த் தொல்லெழிலாம் சேண்மைத் துளிர்தளிர்க்கும்
பைந்தமிழாய்ப் பல்கலையாய்ப் பாரெங்கும்—சொந்தமெனும் 46

சொல்லமைந்து நாடுபல சூழ்ந்துப் பலதமிழாய்ப்
பல்மொழியாய்த் தென்னகத்துப் பன்னிரண்டு - நல்லியலாய்ச் 47

செல்வத் திராவிடமாம் சீர்மொழிகள் பேரருளாம்
கல்வித் திறனமைந்துக் கண்ணியமாய்த் — தொல்லமைப்பு 48

பூத்த முடிமன்னர் போற்ற வளர்ந்தெழுந்து
கோத்தப் பல்பெயராய்க் கூறலுற்று — வாய்த்த 49

உரிமை தனித்தனியே ஓங்கிப் புரந்து
வரம்பு முறையமைய வந்தத் — திருப்பெயரால் 50

சேரத் தமிழென்றும் சோழத் தமிழென்றும்
வீரத் தமிழென்னும் வேணதொரு — சீருடைய 51

பாண்டித் தமிழென்றும் பண்கொங்குத் தீந்தமிழும்
நீண்டிடும் தொண்டைநில நேர்தமிழும் — பூண்டிடும் 52

கேள்வித் துளுதமிழும் கேரளத்துப் பூந்தமிழும்
வாழ்வுக்காம் கன்னடத்து வண்டமிழும் — தாழ்வில்லா 53

ஆந்திரத்துச் செந்தமிழும் அன்புறுமீ ழத்தமிழும்
தீந்திறத்துத் தொல்தமிழாய்ச் சீர்மையொடு - நேர்ந்தொன்றாய் 54

நந்தமிழின் நந்நிலத்தில் நண்புடையப் பண்பினோடு
முந்தைநிலை தன்னின் முழுநிறைவைத் — தந்தத் 55

தனித்தமிழாய் ஓங்கித் தாரணியோர் போற்றத்
தனித்தியங்கி நின்று தவத்தில் — நனிசிறந்து 56

## ஆலுக்கும் தமிழுக்கும் சிலேடை.

வீங்கிப் படரும் வினையழிக்கும் தூய்மையாம்
தேங்கித் தெளிவளிக்கும் தேடரிய — பாங்கொத் 57

திறைமை நிலைநிறையும் எங்கெங்கும் வேராய்
நிறைந்துப் படருமே நீண்டு — சிறந்த 58

திறந்தந்து காக்குமே தேடாது வந்து
திறவுரையும் தீம்பாட்டும் தேர்ந்த — முறையாம் 59

களிநடனம் கண்டுகொளக் காட்டும் முனிவர்
இளிவகல வந்தீண் டிருப்பர் — தெளிமருந்தாம் 60

உண்டியுண முன்னணியாம் ஊடல் தணியவைக்கும்
கொண்டுமே பல்விளக்கக் கோப்பமையும் – தொண்டுடைய 61

வீரப் படைகாக்கும் வேந்திறெடு நான்கணியும்
தீரத் தரியணைமேல் தேர்ந்தாள — நேரொப்பாம் 62

மாக்களுமே இன்பால் மகிழுமே தண்ணிழலால்
நோக்கப் பெருந்தன்மை நோன்புண்டு — காக்குமுரை 63

ஆல்போல வாழ்கென்று ஆன்றோர் தமிழுரைப்பர்
ஆல்தமிழி னுண்மையீ தாகுமால் — நூல்கலையில் 64

## ஆற்றுக்கும் தமிழுக்கும் சிலேடை.

உள்ள அழுக்ககற்றும் ஊராருக் கோரணியாம்
தெள்ளிய நீர்மையைத் தேக்குவிக்கும் — வெள்ளுமொலி 65

வீங்கும் கரையழிக்கும் வேண்டும் துறைகளுண்டு
தாங்கும் தமிழ்நதியின் தன்மையாம் — தேங்கியசீர் 66

## தமிழனின் சிறப்பு

தென்னாடு பல்தமிழில் தேர்ந்திலகும் கல்லூரி
யென்னத் திகழு மெழில்நாடன் — பின்னமிலா 67

சொந்தத்தின் நன்மொழியும் சோர்வில்லாப் பல்வளமும்
சொந்தமதாய்ப் பெற்றிலகும் சுத்தமுளோன் – விந்தியத்தை 68

எல்லை யெனக்கொண் டினியதமிழ் நற்கலையை
எல்லையிலா தாக்கும் இயல்பினேன் — கல்விதனல் 69

வாங்கு மொழுக்கத்தை வாய்மையோ டாண்டுவரும்
தேங்கு மனத்தெளிவைத் தேக்கியவன் — வீங்கும் 70

மலைவளத்தைச் சீர்படுத்தி மாண்பொருளை யுண்ணும்
தலையுணவாய்த் தேர்ந்திட்ட தக்கோன் — நிலமுழுதும் 71

வெள்ளாமை தான்கண்ட வீரன் கறிகாய்கள்
தள்ளாப் பயனென்று தான்தேர்ந்தோன் — எள்ளாது 72

கல்லினங்கள் மண்ணினங்கள் காணும்புல் பூவகைகள்
சொல்லினங்கள் பல்வகையும் சூழ்ந்துண்டு - சொல்லிடிலோ 73

தீங்கில்லை சூதில்லை தேக்கும்பண் பீங்கில்லை
வாங்கிடவே நாணமுறும் வாய்ப்புக்குத் — தீங்கில்லை 74

போரிட்டுக் கொள்ளைகொளும் பொச்சாப்பும் வஞ்சகமும்
நேரிட்டோர் யாரிடத்தும் நேசித்துப் — பேரிட்டுப் 75

பேசும் இருமொழியைப் பேணுவது மீங்கில்லை
கூசிடாக் கள்ளத்தைக் கொட்டியளந் — தேசுகிற 76

மட்டத் தனப்பழக்க மீங்கில்லை மானமது
கெட்டுத்தா னுண்டுடுக்கக் கிட்டிடுமேல் — ஒட்டிக்கொள் 77

ஈனப் பழக்கமுமே யீங்கில்லை என்றுணர்ந்து
மானத் துடன்வாழு மாண்புடையோன் — ஞானத்தின் 78

அன்பு கனிந்த அருட்சுவையை யுண்ணுகின்ற
இன்பக் கவின்மாறன் இச்சையுறு — தன்மானத் 79

திண்மனத்தோன் எல்லோர்க்கும் தீஞ்சொல் தமிழுரைக்கும்
பண்பமைந்தப் பாங்குடையோன் பாட்டிசைத்து-உண்ணுட்டங் 80

கொண்டதிறல் ஒண்டமிழின் கோவைபல நூலணியாக்
கொண்டதிட வண்டமிழன் கோன்புகழை — பண்டன்றே 81

பூண்ட மறத்தமிழன் பொன்முதலாப் பன்மணிகள்
தோண்டி யெடுத்தளித்த தொல்தமிழன் — மாண்டறியா 82

நீண்ட புகழ்தேடி நீணுலகைக் காக்குமொரு
ஆண்டகை நாடுபல ஆண்டகை — நீண்டிடவே 83

வேண்டு வதையறிந்து வேற்றிலதா யூட்டிடுதல்
ஈண்டு நிலையென்றே யெண்ணுதலால் — காண்டகுசீர் 84

பாமாலை சூடிப் பழகியவன் மற்றவர்போல்
பூமாலை யொன்றில் பொலியாதோன் — நாமாலை 85

கேட்டுக்கேட் டின்புற்றுக் கேள்விமேல் கேள்வியுற
நாட்டத் தெளிவுடைய நற்றமிழன் — கோட்டமிலா 86

வாய்மைத் தளிர்வளர வாய்ச்சொல் செழுமையுறத்
தூய்மைப் பொலிவுநிறை தோய்தமிழன் — சேய்மை 87

நிலையென்றும் தேங்கிவிளை நீணிலத்து வாழும்
கலையென்றும் பூத்ததமிழ்க் காவில் — தலைமையே 88

வாழக் கருணையுளம் வாழத் தரணிநலம்
வாழப் புலமைகளும் வாழ்வாங்கு — வாழ 89

நலந்துய்க்கு மெய்த்தமிழன் நாடாண்டு வெற்றி
நலந்துய்த்துத் தோள்விதிர்ப்ப நாடி — கலந்துழைக்கும் 90

பண்புடையோன் பன்னுடும் பாங்கா லெதிர்பார்த்து
நண்புடைய ராயிருக்க நாடுகின்ற — திண்படையோன் 91

காக்கும் தமிழ்நாட்டிற் காணும் சிறப்பதனை
நோக்கும் புலமையினை நோக்கிடுவோன் — தேக்கமுள 92

நீர்நிலைகள் ஆங்காங்கு நீண்டுள்ள த:ஃதேபோல்
கூர்மேகம் தங்குமுயர் குன்றுகளும் — நீர்சுரக்க 93

ஆற்றூற்றுப் பேரருவி யாகி நதியாகி
வேற்றூற்று நாற்றுக்கால் வேய்ந்தாய்ந்துத் — தோற்றத்து 94

பண்ணைக் கழனிகளைப் பக்குவமாய்த் தான்வளர்த்துக்
கண்ணுய்க் கருத்துமாய்க் காவல்செயத் — தண்மையாம் 95

ஆழியினுல் சூழ்ந்த அழகுமலி நன்னுடு
ஏழையென யாருமிலா இந்நாடு — பீழைபடு 96

மட்டமதி கொண்டவரை மாற்றுமதி சூழாமல்
திட்டமொடு கொண்டாடும் தென்னுடு — கட்டழகு 97

மேவுமிள வாலிபர்கள் மின்பொறியை யூக்குவதும்
வேவுசெய லாற்றுவதும் வீரனெனப் — பூவுலகு 98

ஏற்றத் திறலமைய எண்குணமும் தானமைய
சாற்றும் படிவாழத் தக்கோனே — நாற்றிசையை 99

மாற்றப் படுநிலையாம் மாண்புடைய இல்வாழ்வு
தேற்றத் தொடுமிளிரத் தேங்கியே — ஆற்றலுடை 100

வீரப் பொலிவமையும் வேந்தெனவே ஆண்டிட்ட
தீரத் திறலுடைய தென்னரசாம் — சேரலத்தை 101

மாசின்றி ஆண்டுவந்த மாண்புடையத் திண்புயத்துத்
தேசுறுசெங் குட்டுவனும் தென்திசைக்கோன் – வீசுதிரை 102

பாண்டிநா டாளுகின்ற பண்டைத் திறலரசாம்
தீண்டியகை வெட்டியபொற் றிண்கையன் — பூண்டவொரு 103

நீதிநிலை நாட்டபசு நேருளத்தைக் கண்டுமகன்
மீதுகடுந் தேரேற்றும் வீரமுளோன் — கோதகலும் 104

ஔவையைக் காத்த அதிகமான் வள்ளுவனை
ஔதாரி யாக்காத்த ஆலாலன் — செவ்வையாம் 105

வல்லமைசூழ் தென்னிலத்தில் வாகையொடு கற்றவருக்
கில்லையென மாட்டாமல் என்தலையால் — பல்பொருளைக் 106

கொள்கவெனக் கூறும் குமணனும் ஆரியத்தைத்
துள்ளத் துரத்திவிட்ட தோன்றலாம் — வெள்ளிமலை 107

போற்றத் தமிழ்க்கொடியைப் பூட்டும் இமவரம்பன்
தேற்றிடும் சோழரெனும் தேர்வேந்தாம் — மாற்றமிலா 108

கங்கைதனைக் கொண்டுவந்த காட்சியுடை ராசேந்திர
சிங்கநிகர் வெண்குடையின் சேகரனும் — வங்கணமாம் 109

வல்லிளமை தன்னிலுயிர் வாகையுட ஞட்சிதனை
நல்முறையில் சீர்காத்த நாயகனும் — கல்வியது 110

வீங்கும் கரிகாலன் வேற்றினரு மேற்றிடவே
பாங்குரைத்தான் மூத்தோனுய்ப் பண்பமைத்துத் —
[தேங்கியதாம் 111

பேரறிஞர் சீர்புலவோர் பேசாப் பெருஞ்சொல்லை
நேரவையிற் கூறி நெறியினெடு — தாரணிதான் 112

போற்றும் பிசிராந்தைப் பேரோன் நிறைவயது
சாற்றும் சிறப்பறிதல் சால்பென்க — நோற்றும் 113

சிறப்பினே ருள்ளூரர் செல்வரெலாம் நல்லோர்
புறத்துறவோ ருத்தமர்கள் போற்றும் — நிறைமனையாள் 114

நண்புற்றோர் நல்லறிவாம் நட்புடையர் மக்களெலாம்
கண்ணொத்த நோக்கினர்கள் காவலனே — திண்புயத்து 115

நன்னெறியோ னித்தகைய நல்லோர்கள் வாழுவதே
தொன்னெறிசே ரூரென்று சொற்றனரே — தென்னிலத்து 116

என்சொந்த ஊரிதுவே என்றென்றும் சாகாமல்
நின்றே பயனுண்போம் நீடென்ற — நன்முனியும் 117

வாவிநிறை தொண்டைவரு மன்னவரும் தூயதமிழ்
ஆவிநிறை பேரறிஞர் ஆறறிவால் — தூவுமுறை 118

பல்லாற்றல் கண்டினிய பாக்களினுல் தந்தமறை
வல்லாற்றல் மிக்கபெரு வாழ்வதனுல் — தொல்லாற்றல் 119

பூண்டிடுவான் செந்தமிழின் பொற்றேரில் போந்துலவ
வேண்டிதிற லூர்ந்துவரும் வித்தகனுய் — மாண்பழகு 120

## மெய்முழுகிக் காப்பணிதல்.

பூத்திட்ட பூந்தோட்டப் பூங்காவின் பூக்களிடை
காத்திட்டு மெய்வளர்க்கும் காப்பினுக்கு — மாத்திட்டுக் 121

கோணுத இல்லறத்துக் கோப்பமையக் கட்டியதோர்
பூணுன மாளிகையில் பொன்மணியில் — நாணமணி 122

வாழ்க்கைத் துணைவியர்தாம் வைத்திட்ட வெந்நீரால்
காழ்த்துத் தலைமுழுகிக் காரகிலும் — வாழ்த்துடைய 123

சந்தனமும் மஞ்சளொடு தண்மணமும் கோத்திலகு
முந்தியைக் கொண்டவெண் மூதாடை — சிந்தையுறைந் 124

தேயிலகப் பொன்னணியும் தீந்தார் மலரணியும்
மாயிழையாத் தோண்மேல் மலிந்திலக — தேயமுறும் 125

எண்டிசையும் போற்று மெழிலோடு நின்றருகே
பண்ணிசையும் மங்கையினுல் பக்குவமாய் – உண்ணுதற்கு 126

உண்டி யறுசுவையி லுண்பனவும் தின்பனவும்
கொண்டு பருகுவன கொள்வனவும் — தண்டிலையில் 127

நீர்தெளித்துக் காய்பொறியல் நுண்கிழங்கு வித்தவியல்
நேர்கீரை பச்சடியும் நெய்பொடிமா — மோர்வடைகள் 128

அப்பளத்தோ டுறுகா யத்தனையும் வைத்தன்னம்
முப்பழத்தோ டுண்ண முதுபருப்பும் — வெப்பமுள 129

நெய்யூற்றி யுண்கவென நீண்மொழியிற் கூறவுடன்
கையிற் பிசைந்தெழிலாய்க் கண்மூடி — ஐயனைமுன் 130

உள்வணங்கி யுண்டுண்டுண் டொவ்வொன்றைத்
[தின்றின்பாம்
தெள்ளியகாய் தேர்குழம்பும் தீங்குழம்பும் —
[கொள்ளுமட்டும் 131

பாயசம் நக்கிப் பசுமோரில் சோறுண்டு
ஆயசம் நீக்க வணைமீது — சாயலுடன் 132

சற்றிளைப் பாறித் தகுசுண்ணம் பாக்கோடு
வெற்றிலை மென்றுண்டு வீரமொடு — முற்றுகையாம் 133

வீரம் பொலிதருபோர் வெம்படைதான் தன்னுடையிற்
கூரம் பெனமிளிரக் கொற்றவனுய்த் — தேரும்சீர் 134

பேருலா செல்வதற்குப் பேரறிஞர் கூறியவாய்ச்
சீருலா சென்றனனே செந்தமிழன் — தாருறவே 135

## உலாவின் சிறப்பு.

பேருலா முன்னர் பெருமுரசு நூற்றெருருவர்
வீருடனே கொட்டுவது விண்ணெலிப்ப — நேருலா 136

தாரை யுறும்பித் தகுபேரி நற்பம்பை
ஊரை யழைக்கும் உடுக்கையொடு — சூரையிடும் 137

கூத்தாட்ட மேளவகை கூர்நாக நற்சுரமும்
கோத்தமுழா மத்தளமும் கொண்டொலிப்ப —
[நேர்த்தியதாம் 138

வேட்டதுவோ விண்ணிடிக்கும் வாணவகை வேடிக்கைக்
காட்சிகளோ கண்பறிக்கும் காதினெடு — நோட்டமுடை 159

செல்வத் தமிழ்நாட்டுச் சீர்கொடியோ டன்பரெலாம்
வெல்கதமிழ் நாட்டாட்சி வீரமென — சொல்லிடுமோர் 140

பேரொலியோ டோங்கிவரும் பேருலா முன்னெடிய
காரொலிபோல் காளையர்பொய்க் காலுடைய - கூரொலிசேர் 141

வெண்குதிரை யாடிவர வெய்யபுலி வேடமொடு
திண்புயத்தோ ராடிவர தீஞ்சுவைசொல் – ஒண்டொடியார் 142

பூங்கரக மாடிவர புத்தெழிலாம் நற்புதுமை
தேங்கிடவே கண்கொள்ளாத் தேக்கமொடு – வீங்குதிரை 143

பொங்கி வழிந்துப் புகுந்துத் தெருவழியே
தங்கி நடந்தேகும் தன்மைபோல் — பொங்கரவ 144

மிஞ்சிடமுற் சென்றனவே மேலோர் வழிநடப்ப
கொஞ்சிடுநற் சேயர்களும் கூடிவர — செஞ்சொலுடை 145

நாவலர்கள் நாவலநன் நாகரிகம் நாட்டிவர
பாவலர்கள் பாவெழிலைப் பாடிவர — ஆவலொடு 146

நாட்டியத்து நங்கையர்கள் நாட்டெழிலை நாட்டியமாம்
கூட்டுறவைக் கூட்டுவிக்கும் கோலமொடு — காட்டிவர 147

வீரமனக் காளையர்கள் வேய்ங்கழியைப் போர்நெறியிற்
கோரமொடு சுற்றியே கூசாமல் — கூருடைய 148

கத்திவில் வேல்கொண்டும் கம்பிவலை யீட்டிகொடும்
புத்தம் புதுமுறையைப் பூண்பவனி — சத்தமிகுந் 149

தாடும் சிலம்பம் அணிவகுப்ப நீண்டஉலா
வூடும் பலகலைக ளூர்ந்துவரக் — கூடுமெழில் 150

வீதி யிருமருங்கும் வேய்கமுகு செங்கரும்பு
தீதில்மா வாழைபனை தென்னையொடு — கோதறுபூந் 151

தோரணங்கள் பூத்தொளிரத் தோகையர்நல் லாலத்தி
சீரணவத் தாம்சுழற்றிச் செங்கையால் — தாரணியைக் 152

காட்டிடவே தீந்தமிழன் கண்ணியமாய்த் தீரமொடு
நாட்டிடையே செல்கின்றான் நாணயமாய் — வீட்டிலுள 153

பைங்குழந்தை நோய்க்கிழவர் பார்த்துமகிழ் வெய்திடவே
செங்கரும்பைக் கையேந்திச் சென்றனரால் — சங்கவுலா 154

கண்டறியா தாரில்லை கண்ணென்று லென்றல்ல
விண்டறியாப் பன்முறையில் வீங்கியதால் - தண்டமிழ்போல் 155

மீறுசுவை நற்கனியை மீமிசையே வீசிடவே
மாறியுண்டு நாச்சுவைக்க மாந்தினரே — தேறிநின்ற 156

பேரகிலும் சந்தனமும் பேசும் மணம்பலவும்
வாரிவுடல் பூசிடுகை வாய்மையால் — சீரகத்தே 157

உள்ளுணர்வு பொங்கிடவே ஊக்கமது தானெழுந்து
துள்ளிச் சுவையுணர்ந்து துய்த்தனரால் — கொள்ளலிலா 158

வாழ்த்துரையும் வீணைகுழல் வாயுரையும் மேளவகை
வாழ்த்துரையு மிவ்வொலியின் வாய்மையது — காழ்த்த 159

எதிரொலியின் வாழ்த்துரையு மெண்டிசையோர் போற்றும்
முதுமொழியின் வாழ்த்துரையும் மூண்ட — துதியுடனே 160

விண்ணதிரும் பேரொலியின் வீரச் சுவையருந்தித்
திண்மைகொலும் காதுடனே தேர்ந்தனரால் —
[நுண்மையொடு 161

பன்மணமும் சேர்ந்தொருங்கு பண்பட்டு வீசிடுமோர்
நன்மணத்தை யுண்டதுவே நன்ஞசி — இன்னதிறந் 162

தாங்கிடவே செல்லுமுலாத் தண்டமிழன் வெற்றியினைத்
தாங்கியே செல்லுகிருன் தன்னறிவால் — தேங்குநிலை 163

கண்டறிந்தான் தண்டமிழைக் கற்றறிந்தோர் காட்சிகளால்
பண்டிருந்த பண்பதனின் பாங்கதனை — சண்டிகளின் 164

பல்குழுவால் சீரழிந்து பாழ்பட்ட மக்களுடை
சில்குழுவின் பேரமைப்பும் சீர்திருத்த — வல்குழுவும் 165

கற்ருேரும் கல்லாரும் கள்ளத் தனத்தாரும்
மற்ருேரும் மாற்ருரும் மாசுபெற — விற்றேமெய் 166

வாணிபம்போல் செய்து வளநிதியைத் தான்குவித்து
நாணகன்று தீயவழி நாடுவதைக் — காணுதற்கு 167

மேலோரென் ருேர்கூட்டம் மேலுறலும் தாழ்வடையா
நூலோரென் ருேர்குழுதான் நோற்றுதலும் – காலோய்ந்துத் 168

தள்ளாடித் தள்ளாடித் தத்தளிப்போர்க் கீயமனங்
கொள்ளாது தேக்குபவர் கோளறிய — வள்ளலென 169

ஈந்துவக்கு மோலோரின் ஈயும் திறனறியத்
தீந்தமிழைக் கற்றுணர்ந்து தேறிநின்ற — மாந்தருடை 170

போற்றல் தாமுணர்ந்து பேணுமுறை கண்டறிய
வாராத சண்டைவரின் வாதாடி — நேராத 171

போரதனில் வெற்றிதனைப் பூண்டெழிலைத் தான்வளர்த்து
சீரதனை நாட்டினிலே சேர்த்தறிந்து — வீரமுடைத் 172

தென்னாட்டுப் பண்பதனைத் தேக்கிநிலை நாட்டிடவும்
பன்னாட்டு மன்னரொடு பாவலரும் — நந்நாட்டு 173

முற்போக்கி னுண்மையினை மூவேந்தர் தந்திறலை
தற்காப்புப் பல்லிறையின் தன்னெழிலைச் — சொற்காப்பு 174

நாவலரின் நன்னடையை நாகரிகத் தொன்மைகளைக்
காவலரின் ஒற்றறியும் கண்ணியத்தை — பாவினத்தின் 175

ஏழிசையின் பண்பாட் டிசைக்கலைஞர் போக்குகளை
மேழியுழும் மண்போக்கின் மேனிலையை — வாழவழி 176

சித்த மருத்துவத்தைச் செய்வோர்கள் மூலிகையின்
சுத்த மருந்துகளின் சூழ்நிலையை — மெத்த 177

சிலம்பக் கலைகளினைச் சின்னஞ் சிறுவர்
நலம்பயக்கப் போற்றுமுயர் நாட்டப் — புலங்களினை 178

கைத்தொழிலால் பல்லோரும் காட்டும் பொருள்வடிவின்
கைத்திறனைக் கண்டு கனிவுபெற — தைத்திருநாள் 179

ஒன்றே தமிழ்த்திருநாள் உண்மையென் றேதுமொழி
நின்றே நிலவுதமிழ் நீட்சியுறக் — குன்றுமுறை 180

தன்னு லறிவிழந்துத் தன்மானம் தான்மறந்து
புன்னே யதனுல் பொறிகெட்டுப் — புன்மதியால் 181

வாடாது நாட்டிலொரு வாய்ப்பமைத்து மற்றென்றும்
தேடாது செல்வங்கள் சேர்ந்தமைய — ஏடேடாய் 182

கற்றவரின் நற்றிறமை கண்டுகொளப் புல்லறிவைப்
பெற்றவரின் வெற்றுரிமைப் பேச்சரிய — பற்றுடைய 183

நாட்டுணர்ச்சி கொண்டவரின் நண்புகொளத் தாழ்வினையே
கூட்டுவிப்போர் தீச்செயலின் கோளறிய — தேட்டமிலா 184

உள்ளத்துள் நஞ்சூறி ஊக்கமிழந் தேமாந்து
கள்ளத்துள் வாழும் கபடறியத் — தெள்ளித்தன் 185

முற்போக்கைக் கொண்டுயரு மூதறிஞர் தங்களுக்கு
முற்பாக்கைத் தந்து முறைவகுக்கப் — பொற்கடமை 136

கொண்டவற்றைத் தேக்கிக் கொழுபொருளை விற்பனைசெய்
பண்டகத்தின் வாணிபத்தைப் பார்த்தறிய—எண்டிசையும் 187

ஒத்த உளமுளதோ ஓரினமே ஓங்கிடுதோ
தத்திச் சிலவினங்கள் தத்தளித்து — வித்தையிலும் 188

வாழ்க்கை வழிகளிலும் வாய்ப்பின்றிச் சீர்கெட்டு
வீழ்க்கைத் துயருழப்ப மேதினியில் — தாழ்த்தித் 189

தலைதூக்க விட்டிடா தாரை யறிந்தோர்
நிலையமைக்கச் சேயரெலாம் நீண்ட — கலைபயிலும் 190

பள்ளிகளில் கற்றங்கே பாங்குணவு கொண்டினிய
துள்ளுமுறை தங்குபல தூய்கலைகள் — வள்ளலெனத் 191

தக்க மொழியறிவைத் தான்தேர்ந்து வாழ்விணைந்து
தக்கதொரு நற்பணியைத் தான்செய்து — பக்குவமாய் 192

பேதமின்றி வாழும் பெருவழியைத் தானமைத்து
நீதி நிலவிடற்கு நேர்வழியைத் — தோதுடனே 193

காணுதற்கு மங்கையரின் கண்ணியத்தைக் கண்டினிது
வேணதெனும் நல்வழியை வேய்வதற்குக் – கோணலொடு 194

துக்கத்தி லாழ்த்துகிற துன்மதியின் பல்பிளவால்
திக்கற்ற ஏழைகளின் தீதகற்றிப் — பக்கத்து 195

தீப்பகைமை யுண்டாயின் தீரத்தோ டாய்ந்தறிந்து
காப்பதற்குப் பேருலா காண்பதொரு – வாய்ப்பெனவே 196

வீதியுலா வந்தனன்காண் மேன்மையுறு பல்வளஞ்சேர்
வீதிகளைத் தாண்டிமுனம் வந்திடுகை — சோதனையாய் 197

ஞாலத்தோ ரேத்தெடுப்ப நாடுநுழைந் தோர்நாடு
சீலத்தோ டோடிவரும் சீருலாக் — காலத்தே 198

கண்டுக்கண் டாங்காங்கே கற்பனையாய்ப் பற்பலசொல்
விண்டுவிண் டுடே விரைந்ததுவே — எண்டிசையும் 199

ஊக்கம் குறைவுபடா உள்ளத் தொடுபடைபோல்
நீக்கமிலா தாக்கமொடு நீள்தெருவில் — தேக்கமதாய்க் 200

## சீரூர்.

குள்ளச் சிறுவரெலாம் கொக்கரித்துக் கைகொட்ட
மெள்ள வருகின்ற மென்றமிழன் — பள்ளிதனில் 201

செந்தமிழைக் கட்டாயம் செய்திடுவான் மற்றபிற
விந்தைமொழி தம்மை விருப்பமுளோர் — தந்திறமை 202

வீங்குங் கலைபயில வேண்டுவதில் மாற்றமிலை
யீங்கென் றிசைத்திடுவான் யீதுண்மை — தீங்குடைய 203

மூடத் தனப்பழக்க மோட்டிடுவான் கூட்டுறவாய்
நாடுற் றிடப்புதுமை நாட்டிடுவான் — தேடித் 204

திரியாது பல்வளமும் தேங்கிடச் செய்து
மரியாதை யோங்கியே மாண்பாய்த் — திரிதரவே 205

வேற்றுமைக ளில்லாத வேடத் தொருமுகமாய்
மாற்றமே காணுது மாந்தரிடை — சீற்றமிலா 206

ஒன்றுபட்ட நீதிநிலை ஓங்கிடச்செய் வான்தமிழன்
சான்றிதற்கு வேறெதற்கு சாற்றுதற்கு — தோன்றுமுகம் 207

கூறும் குறிப்பறிவீர் குன்றன்னுன் நின்றநிலை
கூறும் சிறப்பறிவீர் கோதகன்று — வீறுகொள 208

வென்றே சிறுவரெலாம் எக்காளம் கொட்டுவதும்
நின்றே உயர்ந்துயர்ந்து நீளுவதும் — நன்றுவந்த 209

தென்றெருவர் தோள்மீ திவர்ந்தொருவ ராடுவதும்
கன்றுபோல் துள்ளியெழுந் தோடுவதும் — நன்றியொடு 210

மற்றொருவன் தின்பதனை மற்றொருவன் பற்றிடவே
மற்றொருவன் தந்துண்டு மல்லுடனே — பற்றிவிளை 211

யாடிவரும் நற்காட்சி யத்தனைபே ருள்ளத்தும்
கூடிவரும் பேருவகை கொப்பளிக்க — நாடிடுதல் 212

சிட்டாளின் செய்கைதனைச் சீரும் சிறப்புமிக
எட்டாளும் செய்யாரென் றேசினரால் — சிட்டாள்கள் 213

வீரத் தமிழனுக்கு விண்ணதிர வாழ்த்துரைத்து
வீர "வணக்கம் வணக்க"மென — பூரித்துப் 214

பள்ளிக்குச் சென்று பலகலையும் கற்றுணர்ந்து
மெள்ள வயதளந்து மேலோனாய்த் — தெள்ளியநல் 215

ஆட்சிதனைக் கற்றுக்கொண் டன்போடு செந்தமிழின்
ஆட்சியாம் சீர்வழியை ஆர்வமொடு — மாட்சிமையாய் 216

ஒன்றுபட்டு மாற்றமிலா தோங்கி நிறைமையாய்
நின்றிருக்கும் வாழ்வினையே நேசிக்கச் — சென்றனனாய் 217

## வாலிபர்

கற்றும் கரைகாணாக் காளையர்கள் காப்பினொடு
பற்றும் அரணெனவே பண்பட்டுச் — சுற்றியுறை 218

கோலமது வீரத்தின் கோப்பதனை நாட்டுகிற
கோலமென காட்டுகிற கூட்டமதில் — வாலிபத்தின் 219

மூர்க்கம் கொழுந்துவிட மும்மடங்கு சீற்றமொடு
தீர்க்கந் துணைமுதிரத் தீந்தமிழன் — பார்க்குமொரு 220

நோக்கத்துச் சாயலது நூர்தனமாய்க் காண்போருக்
காக்கத்தைத் தான்வளர்த்து ஆதரவாம் — போக்குற்றுக் 221

காணும் கவினதனைக் கண்டவுடன் காளையரின்
நாணந் தடையுடைந்து நாக்கதிரக் — கோணலிலா 222

உள்ளந் திறந்தோங்கி ஒண்டமிழன் வாழ்கவெனும்
வெள்ளந் தடையின்றி வேகமுடன் — தெள்ளினிதாய் 223

ஓடுகின்ற வாழ்த்தொலிதான் ஒன்றன்பின் னொன்றாக
வோடிநின்று வான்முட்டு மோசையது — பீடுடனே 224

முன்செல்ல வண்டமிழன் முன்செல்லும் தம்படைதான்
முன்செல்ல யாவர்களும் முத்தமிழன் — தன்பெருமை 225

தானோக்கி நின்றார் தனித்தமிழன் கூறுகிறான்
நாநோக்கும் நம்மெழிலாம் நாட்டினிலே — மேனோக்கில் 226

நம்மிடையே தென்னிலத்து நாகரிகத் தொன்னிலையாம்
செம்மைநெறி யில்லையெனில் செந்தமிழும் — கம்மிடுமே 227

நாட்டெழிலைக் காட்டவுடை நாமொன்று போலணிந்துக்
காட்டிடவே வேண்டும் கனிவினொடு — சூட்டெனவே 228

பன்னாட்டு நாகரிகப் பண்பதனை நாமேற்று
நன்னோக்கு நீங்கியதீ நாட்டமதை — முன்னோக்காச் 229

சாற்றிடுதல் இன்பமெனச் சார்ந்திடுதல் வீணாகத்
தூற்றிடுத லி:தெல்லாம் தூய்மையல — சேற்றளறு 230

பூசித் திரிந்ததுபோல் பூண்டிட்ட புல்லறிவின்
மாசு தனைச்சுமந்த மாற்றார்போல் — கூசுவது 231

வீணு முடையதனுல் வீதிசுற்றும் சோம்பலுடை
மாணு விளேஞரென மாற்றமொடு — நாணுத 232

பல்நாட்டுப் பண்புடைய பங்கேற்று நம்முடைய
தொல்நாட்டுச் சீரதனைத் தூங்கவிட்டுக் — கல்நாட்டு 233

நகரிகம் பின்னேக்க நாட்டுணர்ச்சி கீழ்நோக்க
சோகநிலை யோங்கச் சுறுசுறுப்பைப் — போகவிட்டுத் 234

தூங்குமுக வாலிபரைத் தூக்கி விழிப்பூட்டித்
தேங்குமுக மேயமையத் தெக்கணத்துப் — பாங்குடனே 235

வீரத்தோ டாண்டுகொளும் வெற்றிபெற வாலிபத்துத்
தீரத்தோ டேயுறையத் தேருமுலா — கோருவதைத் 236

தந்திடுவல் புந்திமிகத் தெம்புபெற சொந்தநிலை
தந்திடுநல் லன்பறிவைத் தாங்குமுலா — விந்தை 237

## பெரியோர்

அறிவிற் பெரியோரும் ஆன்றமைந்த கேள்விச்
செறிவிற் பெரியோரும் சீர்சால் — நெறியிற் 238

பெரியோரும் பற்றறுத்துப் பேரருளில் நின்ற
பெரியோரும் ஈகைப் பெரிய — தரணிபுகழ் 239

செல்வப் பெரியோரும் சீர்திருத்தஞ் செய்துவரும்
நல்லபெரி யோரும் நலமுதவு — சொல்லுடைய 240

நீதிப் பெரியோரும் நீணிசையைத் தாமறிந்திங்
கோதும் பெரியோரும் உத்தமராய்த் — தீதகலச் 241

சித்த மருத்துவத்தைச் செய்துபல நோயகல
வைத்த பெரியோரும் வாய்மையை — நத்தும் 242

தமிழின் தலைசிறந்த தத்துவத்தைக் காத்துக்
கமழும் முடிவான காதல் — தமதெனுமோர் 243

அன்பைச் சிரத்தணிந்து ஆர்வத்தின் பண்பதனை
என்பூடு தானிறைத்தே யின்புடனே — நின்ருவி 244

காத்தென்றும் சாகாத கண்ணியத்தைப் பெற்றுள்ள
மாத்தெற்கின் நாகரிக மாம்புத்தர் — கோத்திறத்து 245

அன்பேசு தூயநபி அத்துறையின் நற்பெரியோர்
இன்போடு முன்செல்ல எல்லோரு — மொன்ருகக் 246

கூடினரே கண்கொள்ளாக் கூட்டமதாய்த் தாம்திரண்டு
பாடினரே நாடிவரப் பாதைவழி — சூடினரே 247

தேற்றத் தெளிவினெடு தேர்ந்தாண்மை வென்றியொடு
சாற்றற் கரிதென்னும் சாந்தமொடு — ஆற்றலினை 248

உள்ளத் தொடுக்கி யுயர்ந்தோராய்த் தோற்றத்து
வள்ளல் திறத்தினெடு வண்டமிழின் — தள்ளரிய 249

தன்மையால் சொல்லால் தரத்தா லுணர்வுடைய
வன்மையால் நோக்கத்தின் வாய்மையால் — பன்மையின் 250

நுண்ணுணர்வால் பற்றுகின்ற நூற்புலனுல் பூணுடையால்
கண்ணெளியுள் நோக்கமொன்றிக் காணுதலால் —
[பண்மொழியால் 251

உள்ளக் கிடக்கைதனை யுற்றுணர்ந்து கண்டறியும்
தெள்ளத் தெளிந்த திறலதனுல் — கள்ளக் 252

கருத்தணுவு மில்லாத காரியத்தைக் காணும்
பெருத்த பெருந்தன்மைப் பேச்சுத் — திருத்தமுள 253

நல்ல பெரியோரின் நாணயந்தான் என்றென்றும்
செல்லு மெனுமுரைக்குச் சீரணியாய்ச் — சொல்லும் 254

பெரியோரும் தண்டமிழன் பேருலாமுன் சென்றார்
பெரியோரின் கூட்டம் பெரிதாய்ப் — பெருமிதமாய் 255

நாட்டுரிமை நீடித்து நாட்டிவரு முள்ளத்துக்
கூட்டுறவாய்க் கோணுதும் கூசாதும் — நாட்டினுக்குத் 256

தொண்டாற்ற முன்வந்து தோழமையும் நட்புணர்வும்
கொண்டாற்றி முன்னேற்றம் கொண்டனரே —
[வண்டமிழன் 257

பேரவையின் முன்னினிய பேச்செல்லாம் பேசினரே
நேரவையி தெல்லவர்க்கும் நீதியிதே — கூரறிவால் 258

மாறுபட்ட கொள்கை மனத்தவரும் நாட்டினுக்கு
பேறுகிட்ட முன்வந்து பேசினரே — தூறுவிட்ட 259

திண்டோள் தமிழனுலா சீரும் சிறப்பினெடு
கண்டோர் மகிழ்வெய்தும் காட்சியுமாய்ப் - பண்போங்கும் 260

ஆன்றோர் கருத்தெழிலின் ஆக்க வினையென்றே
சான்றோர் கருதும் சமநிலையாய்த் — தோன்றியதே 261

## பேதை (7-வயதுப் பெண்)

பின்னமிலா வுள்ளத்தைப் பெற்றுள்ள பேதையினள்
நன்னயமே கற்கின்ற நாளிதுவே — அன்னத்தை 262

ஒத்து நடைபழகும் ஊக்கத்தைப் பெற்றெழிலின்
வித்தை பயிலுமிள் வெண்பாவை — சத்தமொடு 263

ஓடோடி தன்னொத்தார் ஒற்றுமையைப் பற்றிடவே
வீடோடி ஆடிவரும் வெண்கரும்பு — பீடோடு 264

தந்தைசொலைத் தான்தாங்கித் தாயைப் பழிக்குமொரு
விந்தையினைக் காட்டிடுமோர் வீம்புடையள் – தந்தைசொல 265

மாட்டேனென் றேமாற்றி மாண்போடு தாய்மடியில்
காட்டேலென் றேடியொளி கற்கண்டு — சூட்டாத 266

பூச்சூடு மெண்ணமெழப் பூநாடித் தன்னழகு
பூச்சூடிப் பள்ளிசெலும் பூங்கொம்பு — மூச்சோடு 267

கண்ணுங் கருத்துங் கவர்ந்திடப் பண்பாடும்
வண்ணத் தெளிவுடைய வான்தெங்கு — நுண்மை 268

முகைமொக்கு ளுள்ளது மோப்பம்போல் பேதை
நகைமொக்கு ளுள்ளதே நாணம் — வகைமொய்த்த 269

கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோள் பேதைக்குப்
பெண்ணிறைந்த நீர்மையது பெட்புறுமால் – எண்ணிறைந்த 270

ஆடையுடுத் தோடிவரும் ஆசைக் குலக்கொழுந்து
ஓடையிலே ஊறிவரும் ஊற்றினிலே — ஆடிமகிழ் 271

செங்காவி யன்ன செழுங்கமலப் பூவன்னா்
மங்காத புத்துளத்து மான்கன்று — சிங்காரப் 272

பேதை பிசகறியாப் பிஞ்சுளத்தர் கொத்தலரும்
கோதை விளையாடும் கோவைமடல் — தீதணுகாப் 273

புத்துளத்துப் பொற்கதவின் பூட்டு மறுவில்லாக்
கைத்தலத்துத் திங்கள் கரைந்தெழுந்து — ஒத்திருக்காப் 274

பொன்னிலவு கொட்டியுளம் போதுமெனும் வெண்மதியம்
கன்மனதைக் காய்த்துருக்கிக் காட்டுமொரு – புன்முறுவல் 275

நாணுமை நாரின்மை நாடாமை யாதொன்றும்
பேணுமை பேதைப் பிறப்பென்பர் — கோணுமை 276

தோணு திளநடையில் துள்ளிவிளை யாடுகின்ற
நாணு வெழிலணியும் நல்லணங்கு — காணுத 277

பேருலா காண்டற்குப் பேசாப் பெருந்திரளாய்ச்
சீருலா கண்டி∴து செப்புகிருர் — யாரிவனே 278

என்றெருருபெண் கேட்ப இனிதொருபெண் கூறுகிருள்
நன்றுபுனை செந்தமிழின் நாயகனும் — வென்றிபுனை 279

நம்தமிழை யாளுதற்கு நாணயத்தைத் தேடிடவே
செம்மையுலா வந்தருளும் செம்மலிவன் — நம்மையெலாம் 280

காக்க வழிகாணும் காவலன் பள்ளிகளை
ஆக்கிப் புரந்துவரும் அண்ணலிவன் — ஆக்குபணி 281

பூணுதற்கு வாய்ப்பமைந்த பூமானும் சீமானும்
காணுதற்குச் சீரமைந்த கல்வியினன் — நாணுடைமை 282

தேங்குமுளம் தேசுமுகம் தீரபுயம் வீரவுடல்
பாங்குடைய சொல்லுரிமை பற்றியவன் — மாங்குயிலின் 283

ஓசை உரம்பெற்று ஓங்குமுரை தாங்கியவன்
மீசை முறுக்குடையோன் மேவாரை — தூசெனவே 284

வெல்லுமொரு கொற்றவனும் வீணில் திரியாதோன்
நல்லபல வேலேசெயும் நண்புடையன் — அல்லலுற 285

ஆழ்த்தியகீழ் மக்களெலாம் ஆதிக்கத் தாலுயர்ந்து
வாழ்த்திடசெய் வீரனிவன் வாய்மையினன் — காழ்த்திடுமி 286

லக்கணத்துத் தோன்றியவன் ஈடில்லான் பீடுடையன்
தக்கணத்து நாகரிகம் தானுணர்ந்து — சிக்கனத்து 287

மெல்லியர்கள் நல்வாழ்வ மேவிடவே பல்வழிகள்
செல்வமொடு காணுமொரு சீலனிவன் — பல்வளமும் 288

தென்னுட்டில் தோன்றுதற்குத் தீரப் பணிபுரியும்
நன்னுட்டத் தேர்ச்சியுடை நாவலவன் — முன்னீட்டிப் 289

போற்றி வளர்த்துவரு பூந்தமிழன் மாற்றலர்க்குக்
கூற்றினிலும் மேலாம் கொடுமையினன் — ஆற்றலிலோ 290

தந்தையினன் நாட்டினுக்குத் தாய்மையினன் வீட்டினுக்கு
எந்தையினன் செல்லுமுலா இன்பமொடு — வந்தனேயாய் 291

வாழ்கநிதம் வாழ்ககலே வாழ்கபல வாழ்நெறிகள்
வாழ்கவே வாழ்கவென வாழ்த்தினரே — வாழ்வில் 292

## பெதும்பை (11-வயதுப் பெண்)

இளமை தழைத்தே எழில்பூக்கப் பார்க்கும்
இளகு மனதோ டிலகும் — தளிரன்னர் 293

செல்விருந் தோம்பிச் செழும்பருவம் தேடுகின்ற
நல்விருந்தாம் நுண்பெதும்பை நாடிடவே — கல்விதனேக் 264

கற்றுவரும் கன்னிகையர் கண்பிறதைக் காணுதோர்
பற்றுதல்கொண் டொன்றினையும் பாராதோர் — நற்றிறமை 295

உள்ளத்தே ஊறுதற்கு ஊக்கமதைப் பெற்றுவரும்
வெள்ளைச்சீ ருள்ளத்தால் வீங்குபவர் — துள்ளுங்கூர் 296

கள்ளநகை எள்ளளவும் காட்டாதோர் கண்டுணரத்
தெள்ளரியத் தாய்மையினைத் தேடுபவர் — தள்ளரிய 297

வெண்கமலப் போதென்ன விண்ணேக்கி மண்ணேக்கி
எண்ணமதால் பின்னேக்கா ஏந்திழையார் – வண்ணமொடு 298

நல்லழகு வாய்த்திடுவார் நன்மலரைச் சூடிடுவார்
சொல்லழகு பூக்குவிக்கும் சொந்தமுடை — தொல்லழகு 299

சேரிளமை தாண்டிவரும் சீரெழிலைக் காண்குவரால்
தேரிளமை வாய்காட்டும் தெம்புடையர் — யாரிடத்தும் 300

நாணகலத் தேன்மழலை நாவினிக்கப் பேசுபவர்
காணுமொரு நல்லெழிலாம் காட்சியவர் — வீணுரையை 301

வீசுவதால் வேறுபடும் வேற்றுமையைத் தூற்றிவிடக்
கூசுதலைக் காணுக் கொழுந்தனையர் — மாசுபடா 302

புத்துளத்துப் பூந்தளிராம் பொன்மலரின் நன்மணமாம்
புத்தகத்தைப் பெற்றுள்ளப் பூம்பாவை — இத்தலத்தே 303

கொஞ்சி விளையாடும் கோதைப் பெதும்பையினர்
மஞ்சுபோல் சூழ்ந்து மகிழ்ந்தனரே — செஞ்சொலுடை 304

திண்புயத்து வல்லிளைஞர் தேரிராசி நன்னகரின்
பண்புலத்தே தோன்றிவலம் பாங்குற்றே — மண்புலத்து 305

கொங்குத் தமிழனுலா கொண்டீண்டு வந்தமையின்
சங்கத் தமிழினிலே சந்தமுறப் — பொங்கிவரும் 306

இன்பத்துள் இன்பமாம் ஈகையுரை கூறவரும்
பன்னிலத்து மக்களையும் பாராட்டி — இந்நிலத்து 307

தென்னந் திராவிடத்துத் தேராட்சி நாட்டுதற்கு
வன்மைத் திறலமைந்த வள்ளலிவன் — முன்னமுணர் 308

காலத்தால் கற்றுணர்ந்த கட்டழகன் போர்முறையின்
சீலத்துப் பேறுடைய செல்வனிவன் — ஞாலத்தோர் 309

போற்றிடவே நம்மிளமைப் பூவையர்கள் கற்றுணர
நாற்றிசையும் பள்ளிகளை நாட்டிடுவான் — ஏற்றமொடு 310

நாமெல்லாம் கூட்டுறவாய் நம்நாட்டு வாழ்வறிவோம்
போமெல்லாப் பொல்லாங்கும் பூண்டோடு – யாமெல்லாம் 311

கல்விநிலை பல்கலையும் கற்றுநிலை பெற்றிடுவோம்
வெல்வழிகள் பல்வகையை மேற்கொள்வோம் —
செல்வநிலை 312

பங்குறுவோம் வாழ்க்கைதனின் பண்பறிந்து மன்றத்தும்
பங்குறுவோம் ஆட்சிதனின் பண்பதிலும் - பங்குறுவோம் 313

என்றே பெதும்பைகுழாம் எண்ணியதை நன்குணர்ந்து
நன்றே எனவேற்று நன்னடிப்பால் — நின்று 314

கனகனத்து நோக்கினன் கண்சிவப்ப நோக்கும்
தனதனப்பு வீறிட்டுத் தாங்கி — மினுமினுப்ப 315

இன்றே செயலாற்றி இன்பளிப்பேன் என்றபதில்
நன்றே எனக்காட்டி நாத்துடைத்துக் — குன்றனுன் 316

கூறுமற் கூறினுன் கோதையர்கள் கண்டுணரு
மாருகக் கண்டுணர்ந்தார் மாற்றத்தை — நேராக 317

வீட்டுக் குடும்பத்தில் வேற்றுமையால் பல்வழக்கக்
கூட்டுக் கலவரத்தில் கூடியுள்ள — வாட்டத்து 318

தண்ணந் தளிர்களெலாம் தத்தளித்து மூத்தவர்கள்
எண்ணந் தனிற்சிக்கி ஏக்குற்று — திண்ணமையா 319

சூதில் வளர்ச்சிபெற்று சோம்பலில் தள்ளாடி
வாதுகளைக் கற்றதுபோல் வாயாடி — மோதுதலால் 320

மொத்துண்டு நோய்க்காளாய் முன்னேற்றம் காணுமல்
பித்துண்டு பேய்க்கோலப் பெண்ணுகி — முத்தமிழின் 321

செல்வநா டந்தோ சிதருண்டு வாடுவது
நல்லோர் ரறியாரோ நாடலவோ — இல்வாழ்வும் 322

இல்வாழ்வா யிங்கே இருக்கத் தகுதியதோ
சொல்லிடுவோ ரின்மையாற் சுண்டினவோ — பல்வளமும் 323

நீக்கற் றிருந்திடுமெம் நீணிலத்தைப் பேணிலமோ
காக்கத் தலைவரிலாக் கட்டமிதோ — ஆக்குவல்யான் 324

சேயரெலாம் கூடிச் சிரித்து விளையாடி
நேயமதை நாடி நிலவிடவே — வாயினிக்க 325

உண்டுண் டுறங்கி உயர்கலைகள் தாம்பயின்று
எண்டிசையும் ஆண்டிடுமோர் எண்ணத்தால் —
தொண்டுசெயும் 326

மக்களினைத் தாங்கும் மதில்மனையைத் தானமைப்பேன்
எத்தினமும் இத்திட்டம் ஈண்டுறையும் — திக்கெட்டும் 327

போற்றிப் புகழ்ந்திடவே புத்தறிவைப் பெற்றிளைஞர்
நாற்றிசையும் சென்றங்கு நண்பதனைக் — கோற்ரெடுக்க 328

செய்திடுவேன் என்றுரைக்கச் செல்லுமுலா பன்னலமும்
செய்திடுவோம் என்றிருந்தார் சீராக — உய்வழியில் 329

## மங்கை (14-வயதுப் பெண்)

வாழ்வின் பருவமது வாய்த்திடுமோர் நல்லியற்கை
வாழ்விக்கும் காலமிது வாய்ப்பென்பர் — வாழ்வுக்கு 330

ஏற்ற உறுப்புகளை ஈயும் தனித்தகைமைக்
கேற்ற தொருகைம்மா ரேதிங்கு — மாற்றமிலா 331

மங்கை யெனும்பருவம் மங்காத நற்பருவம்
தங்கை யெனுமுரையே தன்கையாம் — மங்கையோ 332

மன்கை பிடித்தெழிலாய் மன்னேபோல் வாழ்கென்ன
முன்கை யுணர்த்துவதை முன்கூட்டும் — வன்கையொடு 333

வாழாதே மேன்மையுற வாழ்த்தியதே மெல்லியராம்
தாழாதே வாழ்விக்கும் தன்மையது — சூழாதே 334

பெண்ணென்று கூறுதற்குப் பேணென்று கற்பித்துக்
கண்ணென்று கூறியதும் கற்றிருப்பீர் — எண்ணுவதென் 335

கண்ணழகி என்றதுவே கண்ணகியென் ருனதென
உண்ணுழைந்து கற்ருேர்கள் யூகிப்பார் — பண்ணழகு 336

தானேக்கும் காலேத் தரைநோக்கி நோக்கிலள்போல்
தானேக்கி மெல்லநகும் தன்மையொடு — வானேக்கி 337

ஏதிலார் போல எழிலுடையத் திண்பொதுமைக்
காதலது பூக்கின்ற காலமிதே — தோதுடனே 338

மிக்க பெருந்தன்மை மேலான ஞானக்கண்
தக்க பயன்தந்து தன்மானம் — தொக்கிடவே 339

நோக்கம் பெருநோக்காய் நூதனமாய் நுண்ணுணர்வாம்
நோக்கத் தினைநல்கி நோற்றிடலால் — நோக்கத்தில் 340

தீயுண்டு நீருண்டு தேர்ந்தோர்கள் ஈதறிவர்
நோயுண்டு செய்யாத நோக்கத்தில் — தாயுண்டு 341

தந்தையுமே தானுண்டு தாரமெனல் வாழ்மனையாள்
எந்தையினும் சீர்நிறைந்த ஏற்றமிது — அந்தநலம் 342

பூக்கும் தருணமிது போகாரே எங்கெங்கும்
ஆக்கும் தனிப்படக்கம் ஆர்வமொடு — சாக்குடைய 343

வேற்று ரிடத்து விளையாடித் தம்மனையை
மாற்று ரெனவே மதித்தூடிக் — கூற்றுன 344

தீங்கதனைப் பேசித் திரிந்தன்பை மாற்றுருக்
கோங்கிடச்செய் தில்லத்தி லூக்கமிழந் — தேங்கிப் 345

பகையான எத்தனையோ பாழ்படுகீழ்த் தீய
வகையான எல்லாமும் வாய்ப்ப — நகைசூழும் 346

வீட்டில் வெறுப்புணர்ச்சி வெங்கோபம் வீண்சண்டை
காட்டிக் கயமையென காயாமல் — மேட்டிமையோ 347

டுக்கமா முற்சாகம் உட்காதல் தீப்பழக்கம்
நீக்கியே வீட்டாரை நேசித்துக் — காக்குமொரு 348

நாணமதைக் கட்டி நறுங்காதல் காப்புவளை
பூணுவதிக் காலத்தே பொன்னதனுல் — வேணதெனக் 349

காப்பணித லல்லவது கற்பதுவும் தன்மானங்
காப்பதற்குக் காப்பணிதல் கண்டிடலாம் — பூப்புமுறை 350

கண்டிரண்டு மூன்ருண்டுள் காதலனைத் தேடிவிடப்
பண்டுயர்ந்த பெற்ருேர்கள் பண்பறிந்துக்—கொண்டிடுவர் 351

இத்தகுதி மங்கையர்கள் எல்லோரும் கூட்டமுடன்
தொத்திவரு நற்பவனி தோன்றலினை — மொத்தமொடு 352

ஏதிலார் போன்றே இருநோக்கால் கண்டறிந்தார்
தீதிலா ஆற்றலுடைத் திண்மனத்தால் — கோதிலாப் 353

பைந்தமிழன் பற்றிலர்க்குப் பங்கில்லான் செந்தமிழின்
மைந்தனிவன் குன்ருத மாமதியோன் — நைந்துருகும் 354

மக்களினைக் காக்கின்ற மாண்புடையோன் பேரழகன்
தக்கபரு வத்துதவும் தண்ணளியன் — பக்குவமாய் 355

ஒவ்வொருவ ருள்ளத்தை ஊன்றி யளக்கின்ற
செவ்வியதாம் தூயவுளச் சிந்தையினன் —
[அவ்வையொடு 356

வள்ளுவனை ஆய்ந்தொழுகும் வாய்மையினன் வாழ்கவென
உள்ளமுறக் கூறியே ஒன்ருனர் — மெள்ளமனை 357

## மடந்தை (19-வயதுப் பெண்)

வாழ்வை சிரத்தேற்று வாகையுறத் தானடத்தும்
வாழ்க்கையினை தான்விரும்பும் வாஞ்சையினள் —
[சூழ்கின்ற 358

சுற்றமொடும் நண்பரொடும் சூதற்று நன்னயஞ்சேர்
நற்றமிழைக் கற்றுணர்ந்த நங்கையிவள் — வெற்றியுடன் 359

எத்தொழிலும் கற்பனையாய் எங்கெங்கும் செல்வனவாய்
வித்தை இயல்பமையும் விண்மடந்தை — ஒத்தவுளம் 360

பெற்றிணையும் கொற்றவனைப் பெட்புடனே கொண்டவளாய்
நற்பணிசெய் தின்பூட்டும் நண்புடையள் – பொற்பணிகள் 361

பூண்டொத்தப் பூவையர்போல் பொன்னுடை கட்டிடவே
வேண்டுமெனக் கேட்கும் விருப்புடையள்—மூண்டுவரும் 362

தீப்பகைமைக் கஞ்சுபவள் தீராப் பழியொழித்துக்
காப்பதிலோ அஞ்சாக் கருத்துடையள் — நாப்புதுமை 363

கேட்டுக்கேட் டின்புற்றுக் கேட்கபினும் தூண்டவெழும்
நாட்டத்தே முன்னேறும் நல்லணங்கு — பாட்டொப்ப 364

தானுகப் பாடுமொரு தன்மானத் தையலிவள்
தானே பணிபுரியும் தன்மையினள் — தேனுக 365

முன்னினிக்கப் பேசி முழுமனதோ டொற்றுமையாய்த்
தன்பதியை உள்ளத்தே தாங்குபவள் — பின்னமிலா 366

கற்பதனை நல்லறிவாய்க் காப்பாற்றும் திண்மையொடு
கற்பதனைக் கற்றுணர்ந்தக் கண்ணழகி — முற்படவே 367

இல்வாழ்க்கை தன்னை இயல்பாகக் காக்குமொரு
நல்வாழ்க்கை சீர்பூத்த நன்முத்து — பொல்லாத 368

தீநோக்க வன்கணரின் தீவழிக்குத் தானமையா
மாநோக்க முள்ள மடந்தையிவள் — நாநோக்கிச் 369

சேயுடன் தாயுமாய்ச் சேர்ந்துறையு மேக்கத்தால்
தாயுடன் கொஞ்சுகிற தன்மையினள் — தாயெனவே 370

மாமனையில் தங்கிவளர் மாண்பமைய நாடுபவள்
மாமனெனக் கூற மதியாதாள் — மாமனையும் 371

அண்ணா எனக்கூவி ஆறுசுவை உண்டிதனைக்
கொண்கனோ டுண்டிடக் கூட்டுபவள் — கண்களினால் 372

மாற்றுரை யேயெடுக்க மாட்டாமல் கீழ்நோக்கி
வேற்றுரே போல விரைந்திடுவாள் — தூற்றறியாள் 373

அங்கத்தின் பேரழகை யாருக்கும் காட்டாதாள்
தங்கப் பணிக்கணிசெய் தாக்கணங்கு — தங்கச்சி 374

போன்றோர் குழுமியே பூந்தமிழன் சீருலவில்
ஆன்றோர்போல் பேச்சதனை ஆரம்பித் — தீன்றோர்போல் 375

செந்தமிழின் நன்மகனின் சீரழகும் பேரறமும்
எந்தமிழின் நாடதனை இன்பாக்கும் — சொந்தமகன் 376

வீரப் பொலிவுடனே வேந்தமைப்பும் காண்கிறது
வீரப்போ ரெத்தனையும் வென்றிடுவான் — சூரகுலம் 377

இன்புறவே வாழுவதற் கித்தோன்றல் தக்கவனே
முன்பெரியோர் வாக்குபெறு முன்னவனும் – பின்னமிலான் 378

## ஆண்களின் பிளவு

வேற்றுமைக்கு வித்தாகும் வீணராம் ஆண்களிடை
மாற்றமுறு சாதிமுறை வாழ்வதுவும் — சாற்றும் 379

புலமை உடையோரும் புன்மைப் பிளவால்
நிலைமை தவறிநின்ற நேரும் — உலகியலை 380

கண்டறிந்துப் பேசும் கண்ணியரும் தன்னில்லில்
பண்டறியா சாதிகுலம் பார்ப்பதுவும் — தொண்டுடைய 381

பக்தித் தவத்தினரும் பண்பறிந்த சான்றோரும்
முக்தித் திறலுடைய மூத்தோரும் — இத்தரையில் 382

வீட்டுக்கு வீடு வெறுப்புணர்ச்சி மேல்கீழாம்
நீட்டத்துள் வேற்றுமையை நேர்வதுவும் — கூட்டுறவு 383

சுற்றத்துள் பற்றின்றி சூதுமுறை நாட்டுவதும்
கற்றுணர்ந்தோர் ஒன்றுபடா காட்சிகளும் — சொற்றும் 384

## பெண்களின் ஒற்றுமை

மடந்தை குழுவினரோ மாறுன சாதிக்
கிடந்தந்த தில்லாத தோடு — படர்ந்தொளிரும் 385

பல்வகுப்பைத் தானணிந்துப் பாங்குணராப் புல்லறிவாய்த்
தொல்லைபடோம் ஆண்களெனும் தொண்டுடையோர் —
[வல்லவராய் 386

நம்மீது சாதிகுலம் நாட்டுகிற வேற்றுமையை
எம்மீது சூட்டுதற்கு யாமொப்போம் — செம்மையொடு 387

பெண்பெயர்பின் அம்மைவரும் பேசிடிலோ அள்ளுரிமை
பெண்பெயர்பின் சாதிமத பேயர்களின் — திண்ணியவால் 388

என்றென்றும் வந்ததிலே இன்றதனை நீக்குவபோல்
பன்முயற்சி செய்ததிலே பண்பொருமை — வென்றியுற 389

போரும் சிறைகளுமே புக்கதிலே எத்துணையும்
ஓரும் உணர்வறியா ஆண்களைப்போல் — சீருடைய 390

பெண்களிலே சாதிகுலம் பேசுவோ ரீங்கில்லை
பெண்களைப்போல் ஆண்களுமே பேதமிலாப் —
[பண்பதனைப் 391

பற்றிடிலோ வேற்றுமைதான் பாழ்பட்டு முன்னேற்றம்
பற்றிடுமே தென்னாடு பாங்குரிமை — பெற்றிடுமே 392

பைந்தமிழின் அன்பு பரவியெங் நாட்டினுளும்
செந்தமிழைப் பேசிச் செழிப்பான — சிந்தையுடன் 393

வாழ்விக்க வேண்டியே வண்டமிழன் பேருலாச்
சூழ்கை சிறப்பின் சுகமேகாண் — தாழ்மையிலா 394

வல்லமையைக் காண்குறவே வாய்மையுடன் வந்திட்ட
வல்லனிவன் வாழ்கநிதம் வாகோடு — நல்லறிவே 395

சூழ்கபல வெற்றிகளே சூடிடுக என்றென்றும்
வீழ்க கொடுமைசெயும் வேற்றுட்சி — ஆழ்கடல்போல் 396

கூறினரே மென்மடந்தைக் கூட்டங்கள் நின்றுங்கே
தேறினரே தண்பருவத் தேமொழியால் — கூறில் 397

உடம்போ டுயிரிடை ஊக்கமற் றன்ன
மடந்தையோ டொன்றிடுமே மாண்பு — அடர்ந்த 398

மணியிற் றிகழ்தருமோர் மாநூல்போல் மங்கை
அணியிற் றிகழுவதொன் றுண்டுண் — டிணையில் 399

மடந்தைப் பருவ மடைந்தத் தருணத்
தடைந்த சிறப்பே யதுவாம் — விடிந்திடும் 400

காலை யரும்பிக் கடும்பகலில் போதாகி
மாலை மலருகின்ற மாண்புடையர் — நூலைப் 401

படித்தபடி நிற்கப் பயிலாது வீணே
படித்தவர்போல் பாக்களினைப் பாடி — நடித்தே 402

அழுக்கில் மனத்தை அழுத்தும் கொடிய
பழக்க மதனைப் பழகா — தொழுக்க 403

நிலமீ தெழில்காக்கும் நேர்மை மடந்தை
செலவினிதே நல்லுலா செல்லும் — தலமீதே 404

## அரிவை (24-வயதுப் பெண்)

இல்லக் கிழத்தியென எல்லோரும் போற்றிடவே
நல்ல செயலினையே நாடுபவள் — செல்லமொடு 405

கொஞ்சிவிளை யாடுதற்குக் கூடவே தன்குழந்தை
மிஞ்சிவர வஞ்சிநட மேபுரிவாள் — கொஞ்சமுமே 406

ஐயமிலா தில்வாழ்வை அன்போடு தானடத்தி
வையம் புகழுமுயர் மாண்புடையள் — மெய்யன்பால் 407

மாமியொடு தான்கலந்து மாசகலத் தான்தெளிந்து
மாமனுர் தன்வழிக்கோர் மாசின்றி — நேமமொடு 408

வாழ்க்கை தனைநடத்தும் வல்லமையில் தேறியவள்
வாழ்க்கையெனுந் தோணிக்கு மாலுமியாம் – தாழ்த்துவதற் 409

கெத்துணையோர் தோன்றிடினும் இன்னலெல்லாம் வந்திடினும்
அத்தனையும் வென்றுசெயல் ஆற்றுபவள் — செத்தவர்க்கு 410

ஆண்டுதொறும் நற்கடன்செய் ஆர்வமுள பேருளத்தாள்
நீண்டீண்டு சொற்பொருளை நேசிப்பாள் — மீண்டுமொரு 411

குற்றமது சூழாமல் கூற்றெனவே நோக்கிடுவாள்
நற்றமிழ்க்கோர் தாயாய் நலம்புரிவாள் — பற்றின்றி 412

உத்தமமாய் ஒற்றுமையாய் உண்மையுமாய் சுற்றத்தார்
நித்தம் புகழ்ந்துரைக்கும் நேரிழையாள் — மெத்த 413

அரிவை எனற்குரிய ஆற்றலினைப் பூண்ட
பரிவைத் தலைதாங்கிப் பண்பாம் — உரிமையுடைத் 414

தாயாகத் தான்விளங்கத் தாய்மையாய்ச் சேய்களுடன்
வாயாடி இன்பளிக்கும் வாஞ்சையினள் — நாயாக 415

வாயிற் படிகாக்கும் வாய்மையோ டோயாது
நேயத் தொடுமனையின் நீள்பாரம் — தோயற்கும் 416

காதலனின் மெல்லுயிர்க்குக் காவல் புரிதற்கும்
காதலியாய்த் தாங்கும் கருத்துடையள் — போதனையின் 417

பாடல் பயிலும் பணிமொழியாள் நல்லிசையோ
டாடலும் கற்றறிந்த ஆரணங்கு — நாடிடற்குக் 418

கண்ணகிகோப் பெண்டு கலைபலவும் போற்றுமுயர்
மண்டோ தரிகோதை மாணவ்வை — பெண்புலமை 419

பெற்றுயர்ந்த பேரறிவால் பேச்சின்றி நாடாண்டு
நற்றிறமை நாட்டியது நம்திருநா — டொற்றுமைகாண் 420

என்பதற்குச் சான்றே எழிலரிவை தன்பருவ
வன்மையதே யாகும் வளமுடனே — பன்முறையால் 421

சீர்திருத்திப் புத்தொளியைச் சேகரித்துத் தற்காத்துச்
சீர்திருத்தப் பாதைசெலும் சித்துடையள் — நேர்முறைக்கு 422

அஞ்சாத் துணிவளத்தா லாக்கும் பணிபுரிந்துக்
கெஞ்சாக் கனிவுபெறும் கேண்மையினள் — நெஞ்சார 423

உண்டி சமைத்தினிதே ஊக்கமது மாறுமல்
கொண்ட கணவனொடு கூடிநிறை — நண்பமைய 424

வீட்டாரோ டுண்ண விருப்போடு நண்ணுபவள்
காட்டாளே காயுமுகம் காரமொடு — நீட்டாளே 425

கையதனை ஓடுநடை காணளே கோணியுளப்
பையதனை வைத்தீட்டப் பாராளே — தையலிவள் 426

வீட்டடுக்குப் பானைநிறை வேகாணும் வேணபொருள்
காட்டிலிருந் தேவிளையக் காணுபவள் — நாட்டிலுள 427

வேற்றுமைக ளற்றிடுநாள் விஞ்ஞானம் பூத்திடுநாள்
மாற்றுரைக ளற்றிடுநாள் மண்வளத்தில் — நாற்றுகளே 428

பெற்றிடுநாள் கண்டின்பம் பேணுபவள் பூணுபவள்
கற்றுளநம் செந்தமிழன் காண்பவனி — உற்றதனைக் 429

காணவென்றே நல்லரிவைக் காரிகைகள் சூழ்ந்தனரே
நாணமொன்றே பொற்பணியாம் நாகரிகம் —
[பூணவென்றே 430

காப்புடனே கண்டனர்கள் கண்கொள்ளாக் காட்சிபடை
காப்புடனே தோணுகின்ற கண்ணியனைக் —
[கோப்பெனவே 431

தோரணத்துள் தேர்பலவும் துள்ளுகிற பல்பரிகள்
வாரணத்தோ டாடிவரும் வாய்மையினை — வீரிபுறை 432

கொல்லிமலைத் தேன்பலவும் கொங்கிலுள செங்கரும்பும்
நல்லிராசை நெய்யுமென நாடினரே — பல்லினமும் 433

ஒன்றுகி விட்டதெனும் உண்மை நிறைந்திடவே
நன்றுகச் செல்லுகிறுன் நந்தமிழன் — வென்றுடனே 434

நாட்டுவான் நம்முரிமை நாடுவான் நாட்டுரிமை
காட்டுவான் தீதொழித்துக் கண்ணியத்தைச் —
[சூட்டுவான் 435

புன்வடக்கின் பொல்லாப்பைப் போக்கித் தனிநாடாய்த்
தென்னிலத்தில் பல்வளத்தைத் தேக்கிடுவான் —
[மன்னனிவன் 436

சேரத் தமிழரசின் சீரறிவான் சோழவளத்
தீரத் தமிழரசின் தேர்ச்சிகளும் — வீரமுடைப் 437

பாண்டியரின் பாங்கரசு பண்தமிழா லாண்டதுவும்
மூண்டுமூண் டோடியே மூர்க்கரெலாம் — தூண்டியதும் 438

பல்வடக்கர் போர்க்குப் பலமுறையும் வந்ததுவும்
கொல்லியுறை வில்லோரி கொன்றதுவும் — அல்லலொடு 439

அத்தனைநாட் டாரியமும் அஞ்சியொளிந் தோடினதும்
மெத்தவுமே மேருவரை மேவியதும் — வித்தகமாய் 440

வெள்ளிமலை மீதினிலே விள்ளுதமிழ்ப் பூங்கொடியைத்
துள்ளியெழுந் தேற்றியதும் தோதாகப் — புள்ளியொடு 441

கப்பலது கட்டியதைக் காணுமட்டும் ஒட்டியங்கு
செப்பும் கடாரத்தைச் சேர்த்ததுபோல் — எப்பொழுதும் 442

தப்பின்றித் தன்னுட்டைத் தாரணியோர் தான்களிக்க
ஒப்பின்றி ஆண்டிங் குறவுபட — இப்பவனி 443

## தெரிவை (31-வயதுப் பெண்)

தேடாத் தெளிவதனைத் தேடிடவே தான்தெரிந்து
வாடா முகமுடனே வாஞ்சையுடன் — மூடாது 444

உள்ளத்தை உள்ளபடி உண்மையாய்க் காட்டுமெழில்
வள்ளல் தெரிவையெனும் வாய்ப்புடையள் — கள்ளமிலா 445

தூட்டி வளர்க்கின்ற ஊக்கத்தால் வாழ்க்கையை
நீட்டியே காக்கின்ற நீர்மையினுள் — பூட்டியே 446

காத்தமைக்கும் நேர்மையினுள் காப்பணியைப் பூண்டுள்ளாள்
சேர்த்துவக்கும் பல்வளத்துச் சீதேவி — பூத்தொளிரும் 447

மாமலரின் மாமணத்தாள் மாண்பியையும் மாதவத்தாள்
தூமனத்துத் தோழமைகொள் தோகையினள் —
[நேமனத்தில் 448

ஈடில்லா நற்பருவத் தேந்தலெனும் வாய்ப்புடையள்
ஏடெல்லாம் மேன்மையெனு மிப்பருவம் — நாடெல்லாம் 449

பாட்டமைத்துக் காட்டுதற்குப் பாதையாய் வீட்டியலை
நாட்டமுடன் கூட்டும் நடுநிலையள் — காட்டிலுள 450

பண்டங்க ளின்விளைவைப் பார்த்திணைத்துப் பல்விளைவைக்
கண்டிங்கே இன்புறுநல் காரிகையாம் — தொண்டுதனைக் 451

கற்றோரும் கற்றிடவே கற்பனையைக் காத்தொளிரும்
நற்றவத்தை நாட்டுகிற நாரியிவள் — மற்றோரும் 452

ஊக்கத்தால் முன்னேறும் ஊதியத்தைக் காட்டுமெழில்
தேக்கத்தை முன்னோட்டும் தீந்தெரிவை — பாக்கொத்தை 453

கற்றுக்கற் றுள்ளூறும் கற்பனையின் பேரறிவால்
முற்றுப்பெற் றோராற்றல் மூண்டிடச்செய் — சுற்றத்தாள் 454

கற்றவளத் தின்தெரிவை காட்டும் பவனிதனைச்
சுற்றிமிகத் தெம்புடனே சூழ்ந்தனரே — உற்றறிந்தான் 455

நாட்டிலுள இல்வாழ்வ நாரியரை மாற்றுகிற
வீட்டியலைக் கண்டறிந்தான் வேடமதால் — கூட்டுமுறை 456

மீளா வறுமையினால் மேலாடை இல்லாமல்
தாளாப் பசிதனிலே தன்குழந்தை — மாளாது 457

அண்டைப் புறத்திருந்தே யாருளரிந் நாடறிந்தோர்
கண்டிலரோ நம்மினத்தைக் கண்களினால் – விண்டிலரோ 458

இக்கோல மக்களினை யீதறியாப் பொய்க்கோலம்
புக்கோரே காண்கின்றார் போவோம்வா — தக்கோரில் 459

என்றழைத்து யேகாமுன் ஈரத் துடனெழுந்து
நன்றமைக்க வேண்டுமென நாடியே — நின்றமைக்க 460

வந்தவனே திண்டமிழன் வாங்குதிரைத் தேங்காழி
நந்துறைவன் காப்பான் நடுநிலையாய் — மந்தமிலான் 461

பூந்தா ரணிதோழன் பூவையரின் மாசிலனே
வேந்தாவான் சான்றோரின் வேண்டுதலால் —
[தேர்ந்தோரின் 462

ஆட்சிகொடு காவலினல் அன்னியர்கள் கொள்ளைகொளும்
மீட்சிப் பொருள்தேங்கி மீதமுள — காட்சியொடு 463

பல்வளமும் ஓங்கிடுமே பாரோர் மகிழ்வுறவே
நல்வளமோ டில்வளமும் நாடிடுமே — வெல்வளமும் 464

போற்றத் தனிவாழ்வு பூக்கத் தமிழ்நாடு
ஏற்றத் தொடுவாழ எல்லோரும் — சாற்றிவரும் 465

தம்மிலினில் தாமிருந்து தம்பணியாற் றேடுபொருள்
தம்மனையாள் தான்சமைக்கத் தானுண்ணும் —
[தெம்புலத்தின் 466

பண்புபோல் நாடெங்கும் பைந்தமிழின் நாகரிகம்
நண்புபோல் பெண்ணுளத்தே நாடிநின்று —
[கண்போன்று 467

காக்கும் வலிமையது காட்டும் தெரிவையர்கள்
நோக்கம் பழுதின்றி நோக்கிடவே — காக்குமெனப் 468

பல்லவற்றை நம்பியே பாழ்பட்டுக் கூசாமல்
அல்லவற்றில் உள்ளமது ஆழ்ந்தாழ்ந்து — நல்லவற்றை 469

வீணென்று விட்டுழன்று வீண்காலம் போக்குவதைக்
காணென்று காட்டுமுலா கண்டிடுவீர் — தூணென்று 470

பெண்மைகளு மொன்றாகிப் பேராற்றல் கொண்டிடவே
நுண்மையினைக் காட்டுமுலா நோக்கமிதே — திண்மையாய் 471

ஆட்சி தனித்தியங்கி ஆக்கத் திராவிடத்தை
ஆட்சி செயுங்காலம் ஆய்ந்தெழுவீர் — மாட்சிமையாய் 472

வள்ளல் தெரிவையரின் வாழ்த்துரையைப் பெற்றன்பு
கொள்ளும எழிற்றமிழன் கொற்றவனாய் — வெள்ளமெனச் 473

செல்லும் படையுடனே செல்கின்றான் வீரமொடு
வெல்லும் துணிவுடனே வேகமுடன் — நல்லவைகள் 474

## பேரிளம் பெண். (40-வயதுப் பெண்)

எல்லாம் உணர்ந்திட்ட ஈடில்லாப் பேரிளம்பெண்
பல்லோர்கள் கூட்டமொடு பாங்குடைய — நல்லறிஞர் 475

தொல்லுலகத் தூயதமிழ் தோய்வுடையப் பல்கருத்தில்
வெல்லுமுறை கண்டதற்கு மேலாகச் — செல்லுமுலா 476

கண்கொண்டு கண்டனரே காணாதப் பேர்காட்சி
மண்கண்ட மெங்குமிலா மாட்சிமையாய் — விண்கண்டம் 477

தேங்கித் திணறுமொலி சேண்விதிர்ப்பக் கொண்டதுவாய்
வாங்கு திரையென்ன வாய்த்தகுழாம் — தூங்காழி 478

ஒத்து நிலைநிற்கும் ஓரிடமாய்த் தேங்குமுலா
சித்துரைத்த வான்றோர் செழுமகமாய் — மெத்த 479

பலகலையும் ஒன்றுபட்டப் பண்பறியச் சேர்ந்த
நிலையுணரும் பேராற்றல் நேர்ந்து — பொலிவுறலால் 480

காணற் கெளிதாகக் கண்கொள்ளாச் சீரமைந்து
தோணற் கியாண்டும் தொடர்பமைந்து — பூணுதற்கு 481

உள்ளத்துள் ஒட்டியதாய் ஊக்கமது பற்றுவதாய்
மொள்ளத்தான் மெல்லியதாய் மூண்டதுவை — உள்ளத்தால்

நாட்டியலை ஓரிடத்தே நன்கறியக் காட்டுகிற
பாட்டெனவே தானமைந்துப் பண்பினெடு — வீட்டுரிமை 483

எத்துணைத்து தெய்வநிலை எத்துணைத்து கல்விநயம்
எத்துணைத்தென் ருராயு மேடெனவே — கைத்தலத்தே 484

உற்றநறுந் தீஞ்சுவையி னூண்கனிந்த மாங்கனிபோல்
சுற்றமெலாம் சூழ்ந்திலகும் சொத்தினன்போல் — நற்றவத்தில்

பூத்தபலன் கிட்டியபோல் பூந்தமிழன் செல்லுமுலா
நாத்ததனை தண்பழனம் நட்டதுபோல் — கோத்துறையும் 486

வெண்குடையின் தேர்மீது வீற்றிருந்து தொண்டரணி
பண்புடையத் தாரணிந்து பஃறொருடையும் — வெண்மணியும் 487

வெள்ளைக் குதிரையொடு வீரமுடன் வந்தருளும்
வள்ளத் திரடோளன் வாய்மையினை — கள்ளமிலா 488

பேரிளம்பெண் கூட்டம் பெருமைமிகு தம்மொழியால்
நேரிடுமோர் பெட்பதனை நேர்த்தியொடு — சீரிலகப் 489

பேசுகிருர் தீந்தமிழன் பேறுடையன் சீருடையன்
கூசிநிலா ஆட்சிதனுல் கூர்மையொடு — தேசுலவ 490

மக்கள் நிலையுயர மாணரசு நாட்டிடுவான்
தக்க அரணதனைத் தானமைப்பான் — ஒக்கலது 491

சீரடையும் ஓரினத்தால் சீரழியும் போக்கதுவும்
சீரடையும் யாவர்களும் சேர்ந்தொன்ருய் — வீரமொடு 492

பேதமிலா செல்வாக்குப் பெற்றினிதே உள்ளத்துள்
பேதமிலா மாண்பமைத்துப் பீறிட்டே — தோதமைய 493

அன்போடு தண்டமிழ்நாட் டான்றோர் நெறியமைப்பான்
பண்ணுடும் பார்த்திணைந்து பக்கமுற — எந்நாளும் 494

பூணுமணி யொன்றென்பர் பூவையர்க்குத் தம்மனையில்
காணுமணி சொல்லழகின் காட்சிகளே — தோணுமணி 495

தென்னாட்டுச் செந்தமிழே தொன்னாட்டின் பண்பதுவாய்
முன்னாட்டும் நன்முனிவர் மூதுரையாம் — சொன்னாட்டும் 496

## அறநெறி வாழ்வு

இன்புண்பான் என்பான் உயிர்கொல்லா துண்பதுவாம்
துன்புண்பே ஊனுணவாய்த் தோணுவதால் —
[அன்புணவுண் 497

நல்லார்க்கும் தம்மூரென் றூரில்லை நன்னெறியிற்
செல்வார்க்கும் அஃதேயாம் செப்புங்கால் — பொல்லாத 498

தீங்குடையார் உற்றுறையத் தேயமில்லை இல்லைகாண்
தேங்குபழிக் கெங்கும் தெளிமருந்து — வீங்குகரை 499

ஏரி சிறிதெனினும் நீரூறும் இல்லத்து
வாரி சிறிதெனினும் வாழ்வூறும் — நேரிழையார் 500

எண்ணில் தவத்தூறும் எல்லா எழில்நலனும்
மண்ணின் வளங்களொடு மற்றவையும் —
[பெண்ணிடத்தே 501

## தீநெறி வாழ்வு

காமம் முதிர்ந்தால் கருத்தின்னு காசினியில்
யாமென் பவரிடை யன்பின்னு — நேமப் 502

பொருளில்லான் வேளாண்மை பூட்டிடுத லின்னு
அருளில்லார்க் கின்னுவாம் ஆக்கம் — இ ளில்லாப் 503

## பேரிளம் பெண்ணின் தன்மை

பேரிளம்பெண் நாற்பதினைப் பேணியதா லித்தனையும்
கூரிளம்கண் கண்டவெலாம் கூறினரே — தேரிளமை 504

போக்கறிந்த பூவையர்கள் போர்மகளும் சீர்மகளும்
காக்கமகப் பேறுடைய காட்சிகளும் — நீக்கமற 505

பாட்டியெனப் பேரனவன் பாங்கா யழைத்திடவே
போட்டியிலாப் பேத்தியையும் போற்றியவள் — நாட்டிலுள 506

எல்லா வழிகளையும் ஏட்டின் நலன்களையும்
செல்வாக் கொடுநடத்தி செப்பனிட — வல்லோர்போல் 507

மேல்மாடி தன்னிலே மேட்டிமையாய் வாழ்ந்தறிவாள்
நால்வகையின் நாணயமும் நாடியவள் — நூல்துணியைக் 508

கண்ணெடுத்தும் பாராமற் கட்டியுள மற்றவரை
மண்ணி லிழிவாய் மதித்திழித்துப் — புண்படவே 509

பேசித் திமிருடனே பெண்ணில் பெருந்தகையாய்
நேசித் திருந்ததுவும் நீணிலத்தில் — கர்சற்று 510

சுற்றத் தொடுநட்பின் சொல்லற்றுக் கந்தையைச்
சுற்றிப் பழங்கூழைச் சோறென்று — வற்றலொடு 511

உள்ளிருந்தே உண்டன்றைக் கோர்பொழுதைத் தள்ளிவிடும்
வெள்ளை வறுமையால் வெந்துழலும் — தள்ளரிய 512

மட்டப் பழக்கத்தை மாண்பென்று கொண்டிழிய
கெட்டக் கயமைக்குக் கீழ்ப்படிந்து — தொட்டிடவும் 513

நாணும் படிவாழ்ந்த நச்சுநிலை தானறிவாள்
காணும் நிலவுலகின் காரிகையே — தோணும் 514

செயலெல்லாம் தான்செய்து சீர்கொண்ட தோகை
மயிலென்ன கண்ணிறைந்த மாண்பா — மொயிலுடையாள் 515

ஆறறிவு பூத்தொளிரும் அன்னையினும் அன்னையிவள்
பேறுபல கண்டொளிரும் பெண்ணிவளே — மாறுபடா 516
பெண்ணிற் குரியபெரும் பேறென்னும் கற்பதனைத்
திண்ணமதாய்க் காத்திட்ட தீரப்பெண் — உண்மையாய்த் 517

தற்காத்துத் தற்கொண்டான் தன்னைக்காத் தான்றோரின்
சொற்காத்துச் சோர்வில்லா சொன்னயத்தாள் — கற்றிருந்தும்

பெண்ணேவல் செய்தொழுகும் பேராணிற் பெண்மைசூழ்
பெண்ணே பெருமையெனும் பெட்புடையள் – திண்மையாம் 519

பெண்ணினாற் பெண்மை பெறலின்றி பீடோடு
பெண்மையிற் பெண்மையாம் பெண்ணிவளே—கண்ணதனால் 520

கண்டோர் உயிருண்ணும் கற்பனையைக் கற்றதனால்
தொண்டாற்றித் தூயநிலை தூக்குபவள் — பண்டுடைய 521

ஆன்றோரின் வாக்கதனை அன்பினொடு தன்னிடத்தே
ஈன்றோராய் முன்னாட்டும் இன்புடையள் — சான்றோராம் 522

பொன்னுருக்குப் பேரழகு பூம்பாவை சித்துளதால்
தன்னிடத்தில் பல்லிடத்தைத் தானறிவாள் – தென்னிலத்து 523

வாய்மை அறிந்தொழுகும் வள்ளல் வடபுலத்தோர்
தூய்மை யிலாத்துணிவாம் துன்மார்க்கக் — காய்மையின் 524

போக்காம் வினைபுகுத்திப் பொய்மைசேர் தீநெறியாம்
நோக்கத்தை உட்செலுத்தும் நுண்மையினைப் — போக்கிடுவாள்

தெய்வங்கள் பல்வகையும் தேரூர் வலங்களெனும்
பொய்வகைகள் சித்தரித்துப் பொல்லாங்கு — செய்வதற்கு 526

நூன்முறைகள் பாவழிகள் நூதனபல் லாலயங்கள்
வான்படர்ந்த பூசனைகள் வம்புரைகள் — தேன்கலந்த 527

ஊண்வகையை வீணாக்கும் ஊக்கமிலாப் பன்முயற்சி
வீண்செயலை நீக்கியொரு மெய்யிறையை — காண்கவெனக் 528

கூறு மொருசாரின் கூற்றினையும் நற்புகழின்
பேறு கிடைத்தற்குப் பேரறிஞர் — சாறுமுறை 529

எத்துணையோ கண்டு எழில்நூற்கள் பற்பலவாம்
வித்தை நலங்கோத்த வெல்கவிஞர் — சித்தமுள 530

சன்மார்க்க நன்னீதி சாற்றும்பல் தத்துவத்தின்
நன்மார்க்க கூற்றொருசார் நாட்டுவதும் — நன்கறிந்து 531

தெள்ளறிவு பூத்தத் திருவுளத்துத் தையலிவள்
கள்ளமுறு பொய்மைதவிர் காட்சியவள் — துள்ளுமனம் 532

ஐந்து பொறிவழியே ஐம்புலனோ டோடி
நைந்திடா வாறு நடந்திடுவாள் — சிந்தையுற 533

வாழ்வு நிறைவுற்று வாழ்ந்திடவே வாழ்த்திடுவாள்
தாழ்வு தனைக்கருதாத் தாய்மையினள் — சூழ்வுடைய 534

உள்ளத் துயிரேபோல் உள்ளுடம்பு சாகாத
வெள்ளத் தொளியறிவில் வீங்கியவள் — கொள்ளத்தான் 535

பேரிளம்பெண் ணென்னுஞ்சீர் பெற்றோர்கள் பேசிடற்கே
நேருளங்கொண் டொற்றுமையாய் நீண்டகுழாம் — தாருடனே

பல்லோ ருடன்கூடி பாங்குறவே வாழ்த்தினர்காண்
நல்லுலாப் போந்திடுமந் நம்பிதனை — வெல்வழியைத் 537

தாண்டி நகரடைந்துத் தன்மானத் தார்வமொடு
வேண்டும் புதுவழிகள் வேய்ந்தமைத்து — தூண்டும் 538

எழிலமைய ஆட்சிமுறை ஏற்றே வளமை
அழகமைய பல்முறையும் ஆக்கிப் — பழமுறைகள் 539

பூத்தொளிர ஆண்டனனே பூதலத்தோர் பூரிக்க
வேத்தினரும் உண்மகிழ்ந்து வேலைசெய — மாத்திறத்துச் 540

சான்றோரு மேத்தெடுப்ப சாதிக்கும் தண்புலமை
யீன்றோர்கள் சூழ்ந்திருந்து எண்ணியதை — தோன்றலினுக் 541

கூட்டிவர வீரரெலாம் ஊக்கத்தோ டன்பதனை
காட்டி யரணெனவே காவல்செய — நாட்டிலுள 542

வன்பணியோர் வாய்மையொடு வாழ்க்கைத் துறைகளிலே
நன்பணியை செய்தாக்கம் நாடலுற — இன்பதனை 543

ஊற்றேனவே செம்மொழியால் ஊட்டுகிற சேயரெலாம்
நாற்றெனவே தான்வளர்ந்து நன்மையுற — போற்றிவளர் 544

தன்னந் தமிழாட்சி தாங்கும் திராவிடத்துத்
தென்னந் திருவாட்சி தேங்கியதே — முன்னின்றோர் 545

போற்றிடுமோர் கோவைநகர் பூண்டதிரு நெல்வேலி
சாற்றும் மதுரை திருச்சிநகர் — ஏற்றமிகும் 546

தஞ்சையாற் காடுகூடல் தண்புதுவை செங்கல்பேர்
மிஞ்சிடுசீர் சென்னைநகர் மேன்மையாம் — செஞ்சொலுடை 547

ஆந்திரத்துப் பல்நகரும் அண்மையாம் கன்னடத்தும்
தேந்திரத்துக் கேரளமாம் தேநகரும் — தீந்தமிழன் 548

நற்பவனி நீக்கமற நண்புப் பெருக்கெடுத்து
முற்படுநற் றேற்றத்தே மூதறிவால் — விற்பனத்தே 549

வெற்றிமேல் வெற்றி விரைந்தேற்று வேகமுடன்
சுற்றியதோர் தேக்கச் சுழலுவப்ப — நற்றவத்தே 550

கோவைவழி ஈரோட்டுக் குள்நுழைந்து நற்சேலம்
தாவியடைந்த தேயிராசை தாங்கியதே — நாவலர்கள் 551

போற்றிப் புதுப்புதுமை பூக்கத் திறமையொடு
சாற்றும் எழிற்கவிஞர் சான்றினொடு — சாற்றிடவே 552

பல்கலைக ளார்வமொடு பக்கத்துச் சூழ்ந்திலகச்
செல்வநிலை மென்மேலும் சீரடைந்து — மல்கியுற 553

குடிசெய்வ லென்பவரைக் கூடி யருகிருக்க
மடிதெற்று முந்துகிற மாண்பு — திடமுறவே 554

வாழ்த்துரைத்து வாழ்த்துரைத்து வாகாய்த் தமிழாட்சி
வாழ்த்திடவே நின்றிலகும் வாய்த்து. 555

தென்னகத்துத் தமிழ்க் கடல்

# மறைமலை அடிகள் வரலாற்றிலும்

## இராசிபுரம் அரங்கசாமி

இடம் பெற்றார்.

திருவள்ளுவர் மறையைப் பரப்ப அருந் தொண்டாற்றிய அடியார்கள் பலரில் சேலம் சீர்மையிலுள்ள இராசிபுரம் நகரத்து தொடக்கப் பள்ளி ஆசிரியர் அரங்கசாமி அவர்களை ஈண்டு குறிப்பிடாமலிருக்க முடியாது. அன்றியும் இவர் திருக்குறளின் வழியாக தமிழர்தம் அரசியல் சட்டம் இனம் சடங்குகள் வாழ்க்கை முதலியன அமைதல் வேண்டுமென்ற பேருணர்ச்சி கொண்டார். அதற்காக தமிழகத்திலுள்ள புலவர் பெருமக்கள், பல்வேறு அரசியல் இயக்கத் தலைவர்கள், வகுப்பினர்கள், சமயத்தவர்கள் கொண்ட அரசியலமைப்பு அவை, போன்றதொரு மாநாட்டினை மறைமலை அடிகள் தலைமையில் நடத்த தம், உடல் பொருள் ஆவி ஆற்றல் அனைத்தையும் வழங்கி பெரும்பாடு பட்டவர் திருக்குறள் ஆட்சி என்ற ஒரு திங்கள் வெளியீட்டையும் நடத்தியவர். இத்தொண்டில் தம் வறுமையை மேலும் வறுமை ஆக்கிக்கொண்டு துன்புறுபவர்.

**அரங்கசாமி நல்லுணர்ச்சி வாழ்க !**

★

[மறைமலை அடிகள் வரலாறு—பக்கம் 775

# திருக்குறள் அந்தாதி.

திருக்குறட் பாக்களில் சிலவற்றை அந்தாதியாகத் தொடுத்து இந்நூலை ஆசிரியர் வெளியிட்டுள்ளார். நினைவிலே வைத்துக்கொள்வதற்கு அந்தாதி முறை மிகவும் ஏற்றது. அம்முறையில் மட்டுமின்றி அகராதி வரிசையிலும் சில குறட் பாக்களைத் தொகுத்திருக்கிறார். உரை சுருக்கமாகவும் தெளிவாகவும் இருக்கிறது.

[தினசரி—21—4—'46

திரு. அரங்கசாமி அவர்களால் வெளியிடப்பெற்ற "திருக்குறள் அந்தாதி" என்ற குறள் திரட்டு 195 குறட் பாக்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இவற்றை மனப்பாடம் செய்து வரிசையாகச் சொல்வதற்கு இம்முறை பெரிதும் பயன்படும் என்பது வெள்ளிடை. எளிய நடையில் எழுதிய புத்துரை எல்லாருக்கும் பயன்படும்.

[இலங்காதேவி-கொழும்பு—11—7—'46

தமிழ் மறையாம் திருக்குறளில் உள்ள 151 குறள்கள் "அந்தாதி"யாகத் தொகுக்கப்பட்டுள்ளது பாராட்டற் குரியது. அவற்றுக்குத் தெளிவான சுருக்கமான உரையும் எழுதியிருக்கிறார் ஆசிரியர். பயன்படவல்ல நூல்.

[கிராம ஊழியன்—1—7—'46

கடுகைத் துளைத்து எழ்கடலைப் புகுத்தும் அதிநுட்பமான திருக்குறள் பொக்கிஷத்திலிருந்து அரங்கசாமி அவர்கள் "அந்தாதி" முறையில் சிலவற்றையும் அகராதி முறையில் சிலவற்றையும் எழுதி வெளியிட்டிருக்கிறார். படிக்க மிக இன்பமாயிருக்கிறது. மாணவர்களுக்கு இம்முறை மிகப் பயன்படும்.

[மறுமலர்ச்சி-யாழ்ப்பாணம்—1—7—'46

தமிழகத்துக்கு ஒரு தனிச்சிறப்பளித்த வள்ளுவனாரின் குறள் மேம்பாட்டை அரியாதாரில்லை. அதனை நாட்டு மக்களிடையே நன்முறையில் எளிய சாதனத்தின் வாயிலாகப் பரப்ப வேண்டுமென்பதில் முரண்பாடிருக்க வழியில்லை. அத்தகைய சிறந்த சாதனத்தைத்தோழர் அரங்கசாமியார் தந்துதவி உள்ளார்.

தமிழ் உள்ளம் படைத்துத் திகழ விழையும் தற்காலத் தமிழருக்கு "திருக்குறள் அந்தாதி" ஒரு அரிய விருந்தாகும்.

[விடுதலை—6—8—'46

"திருக்குறள் அந்தாதி" திருக்குறள் பலவற்றை மக்கள் மனப்பாடமாக்கிக் கொள்வதற்குதவியாக அந்தாதித் தொடையான் அமைத்துக்காட்டுவது. இவற்றால் திருவள்ளுவர் சீர்மையினையும் திருக்குறளின் பெருமையினையும் உலகிற் பரப்ப முயலும் அரங்கசாமியின் நோக்கம் பாராட்டத்தகும். செந்தமிழ்த் தொகுதி 43. பக்கம் 191.

[மதுரைத் தமிழ்ச் சங்கம்.

# தமிழின் உயிர் நாடி அல்லது படிப்ப தெப்படி.

தமிழ் நூல்களைப் படித்து அவைபற்றித் தெளியும் விதம் தமிழின் உயிர் நாடி அல்லது படிப்பதெப்படி என்ற நூலில் விவரிக்கப்பட்டிருக்கிறது. [தினமணி—9—5—'47

தமிழறிந்தோர் தமிழ்ப்புத்தகங்கள் எதையும் படிக்கலாம். படிப்பதும் எளிது, ஆனால் படித்ததை புரிந்து கொள்ள வேண்டும், கருத்தறிந்து கற்கவேண்டும். அது எப்படி என்பதை விளக்கும் நூல்தான் இது. பழம்பெரு தமிழ்க்காவியங்களாகட்டும், ஏனைய நூல்களாகட்டும், அதை எப்படி அறியும் தன்மையில் படிப்பது? என்பதை இந்நூலாசிரியர் நன்கு விளக்கியிருக்கிறார். எல்லோரும் சர்வ சாதாரணமாகப்படித்துணருமாறு நடை அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

[தினத்தாள்—10—8—47

செய்யுட் கலை, அறிவுக் கலை, மொழிக் கலை, அன்புக் கலை, மருத்துவக் கலை, கற்பனைக் கலை, தொழிற்கலை, காதற் கலை, சமத்துவக் கலை, இசைக் கலை, நடன கலை, ஓவியக் கலை, சிலம்பக் கலை, அரசியற் கலை, மெஞ்ஞான கலை, முதலிய ஒவ்வொன்றையும் சிங்க நோக்கில் பார்க்கிறார் இந்நூலாசிரியர் அரிய கருத்துக்கள் பலவற்றை உதிர்க்கிறார். [சுதேசமித்திரன்—19—10—'47

சிந்தனைக்கு விருந்தான வாழ்விற்குப் பயனுள்ளதான கருத்துக்கள் இடம் பெற்றிருக்கின்றன. கலைகளைப்பற்றி ஆய்ந்து கூறும் தனித்தனி நூற்கள் பற்பலவாக வளர்வதற்கு இந்த நூல் ஒரு ஆரம்ப வழி வகுத்திருக்கிறது. கலைகளைப்பற்றித் தெரிந்துக் கொள்ள விரும்புவோர் இந்த நூலை அவசியம் படித்தறிதல் வேண்டும்.

[குடிஅரசு—14—2—'48

பொதுவாகவே பாமர மக்களின் மனப்போக்கு பொழுது போக்குக்காக நுனிப்புல் மேய்வதிலேயே நாட்டங் கொண்டிருக்கிறது. ஆழ்ந்த கருத்துக்களை அள்ளிவீசி அறிவுக்கு நல்ல விருந்தளிக்கும் அரிய நூல்களின் மீது மக்களின் கவனம் செல்வதில்லை. அத்தகையவர்களின் மனதைக் கவர்ந்து, அவர்களுக்கு அறிவு வளர்ச்சியை ஊட்டுவதற்காக படிப்பதெப்படி? என்ற அறிவு நூலை ஆசிரியர் இயற்றி இருக்கிறார். கலைகள் பலவற்றை தன் அறிவின் திறமையைக் கொண்டு ஆராய்ந்து மக்களுக்குப் பயன்படும் முறையில் எளிய நடையில் கருத்துகள் மலிய எழுதியிருக்கிறார். தமிழ் மொழியின் மீது பற்றும் - தமிழ் வளர்ச்சியில் ஆர்வமுள்ளவர்கள் இத்தகைய நூல்களை ஆதரித்து ஊக்குவிக்க வேண்டியது அவசியமாகும். [புத்துயிர்—24—10—53

# திராவிட ஆட்சி முறை 333.

திராவிடநாடு பிரிந்து விட்டால் அது எப்படி இருக்கும்? அது என்ன ஆகும்? திராவிட ஆட்சியில் கடவுள் இருக்குமா? கோயில் இருக்கலாமா? கல்விக்கூடங்கள் எவ்வாறு அமையும்? சமுதாயம் எவ்வாறு இருக்கும்? என்றெல்லாம் பலர் கேட்டவண்ணம் உள்ளனர். இப்படிக் கேட்போரிலே சிலர் அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவலிலே கூடக்கேட்பது உண்டு. சிலர் என்ன சொல்லிவிடமுடியும் என்று கேட்பதும் உண்டு. எது எவ்வாருயினும், இதைப் போன்ற எந்தெந்த வகை வினு ஆயினும் சரி. அத்தனைக்கும் விடைகளைக் கண்டிருக்கிருர் இராசை கி. அரங்கசாமி, திராவிட ஆட்சிமுறை 333-ல்.

[திராவிடநாடு—20—10—57

திராவிடத்தின் பண்பாட்டினையும் நாகரீகத்தையும் பெருமையை யும் புகழையும் சிறப்பையும் செல்வத்தையும் வனப்பையும் வாலாற்றை யும் அழகுற விளக்கிக்காட்டி அவற்றிற்கான இலக்கணமாகத் திகழும் முறையில் ஆசிரியர் அரங்கசாமி அவர்கள் இந்நூலைச் செய்யுள் வடிவில் இயற்றி இன்பத் திராவிடத்திற்குத் தந்துள்ளார். வாழ்க்கை மன்றம், ஆட்சி மன்றம், ஆய்வு மன்றம், என்று மூன்று பிரிவாகப் பிரிவாக்கப் பட்டு ஒவ்வொரு மன்றமும் 111, செய்யுட்களாய் அமையுமாறு 333, செய்யுட்களால் இந்நூல் ஆக்கப்பெற்றுள்ளது. பொருள் நயமும் சொல் நயமும் ஓசை நயமும் இனிய முறையில் பொதிந்து காணப்பெறும் வெண்பாச் செய்யுள்கள் சிறந்து காணப்பெறுகின்றன.

[மன்றம்—27—10—'57

நமக்கும் நம்மைப்பற்றி அறிய அவாவுறும் பிறர்க்கும் பயன்படும் வண்ணம் என்றும் உள்ளத்தில் நிலைத்திருக்கச் செய்யுள் வடிவினைக் கையாண்டுள்ளார் ஆசிரியர். அறிதின் முயன்று பல நூல் பயின்று திராவிடர் இயக்கக் கொள்கைகளைத் தெளிவாக உணர்ந்து, தம் தமிழ்ப் புலமையின் வலிவால் பொலிவுமிகும் இவ்வுயரிய நூலை இயற்றிய தன் வாயிலாகத் திராவிடத்தாரால் ஒரு முகமாகப் பாராட்டப் பெறுவார் என்பதில் ஐயமில்லை. அனைவருடைய கையிலும் திருக்குறளுக்கு அடுத்துத் திகழ வேண்டிய ஒரு ஏடாகும் இது.

[முரசொலி—20—12—'57

ஸ்ரீ தனலக்ஷ்மி பவர் பிரஸ், இராசிபுரம். C. 1000—5—12—1959

# எமது வெளியீடுகள்.

★

| | | ரூ. அ. |
|---|---|---|
| தமிழின் உயிர் நாடி அல்லது படிப்பதெப்படி? | ... | 1—4 |
| ஷை புத்தகம் அட்டை பைண்டு | .... | 2—0 |
| திராவிட ஆட்சி முறை 333 | ... | 1—0 |
| தமிழன் உலா | ... | 1—0 |
| திருக்குறள் அந்தாதி | .... | 1—0 |
| வள்ளுவர் வகுத்த நம் நாட்டுச் சட்டங்கள் | ... | 0—4 |
| குழந்தை உள்ளம் | ... | 0—2 |

## வெளி வருபவை.

| | | |
|---|---|---|
| வாழ்வியல் அருட்பா | .... | 1—0 |
| அறநெறித் திருப்புகழ் | ... | 1—0 |
| அன்புக் கலம்பகம் | ... | 1—0 |
| புலவர் விடுதூது | ... | 1—0 |
| திராவிடத்துப் பரணி | ... | 2—0 |

அஞ்சல் செலவுடன் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.


கிடைக்குமிடம்:

**திருக்குறள் பதிப்பகம்,**

இராசிபுரம்.

(சேலம் மாவட்டம்.)

ஸ்ரீ தனலக்ஷ்மி பவர் பிரஸ், இராசிபுரம்.